# யாழ் ஓசை கட்டுரைகள்

சிரேஷ்ட ஊடகவியலாளர்
லைச்சுடர் என். இராமச்சந்திரா ஜே.பி.



# யாழ் ஓசை கட்டுரைகள்



சிரேஷ்ட ஊடகவியலாளர்
கலைச்சுடர் என். இராமச்சந்திரா ஜே.பி.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | யாழ் ஓசை கட்டுரைகள் |
| ஆசிரியர் | : | கலைச்சுடர் என். இராமச்சந்திரா ஜே.பி. |
| வெளியீடு | : | அருள்சுரபி பிரசுரம்<br>கலைமணி வீதி, கட்டப்பிராய்,<br>யாழ்ப்பாணம். |
| முதற் பதிப்பு | : | 2013 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | xi +85 |
| பிரதிகள் | : | 500 |
| விலை | : | 150 ரூபா |
| கணினி வடிவமைப்பு | : | பாரதி பதிப்பகம்,<br>இல. 430, கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |

# சமர்ப்பணம்

எங்கள் சிரேஷ்ட புதல்வன்
**அமரர் ஆர். கோணேஸ்வரன்** அவர்களுக்கு
இந்த சிறு நூலை பணிவுடன் **சமர்ப்பணம்** செய்கின்றோம்.
அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் **பிரார்த்திக்கின்**றோம்.

ஓம் சாந்தி.

நூலாசிரியர்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்துரை | vii |
| வாழ்த்துரை | viii |
| வாழ்த்துரை | ix |
| முன்னுரை | x |
| என்னுரை | xi |
| அற்புத விநாயகன் தலங்காவலன் | 01 |
| கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு இராஜகோபுரம் | 03 |
| யாழ். குடாநாடு எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகள் | 06 |
| இல்லை என்றால் இயற்கை அன்னை நகைப்பாளே | 10 |
| பொது மலசல கூடங்களில் சுகாதாரம் பேணப்படுமா? | 12 |
| சைவமதம் காப்பாற்றப்படுமா? | 14 |
| ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுமா? | 16 |
| அழிக்கப்பட்ட பனை மரங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா? | 19 |
| யாழ். குடாநாட்டில் தடையின்றி மின்சாரம் கிடைப்பது எப்போது? | 21 |

பயபக்தியோடு எளிமையாக ஆலயம் செல்லும் காலம் எப்போது வரும்? 23

தலைமன்னார் – தனுஷ்கோடி கப்பல் சேவை எப்போது? 25

பெண்கள் வாழ்வைச் சிதைக்கும் சீதனம் 27

ஆரோக்கியமான வாழ்வுக்கான பழக்கவழக்கங்கள் மக்களிடத்தில் ஏற்படுமா? 29

பொது ஆலயங்களின் பராமரிப்பில் கவனம் வேண்டும் 31

மண்டைதீவுக்கு மின்சாரம் எப்போது? 33

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலை எப்போது திறக்கப்படும். 35

கல்வியங்காடு எனும் இடத்தில் செங்குந்தா இந்துக்கல்லூரி 38

மண்டைதீவு நெசவு நிலையம் மீண்டும் இயங்குமா? 41

மண்டைதீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி 43

திருநெல்வேலி பொதுச்சந்தைக் கழிவுகள் அகற்றப்படுமா? 45

அபிவிருத்திக்காகக் காத்திருக்கும் கட்டப்பிராய் கிராமம் 47

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு கேள்விக்குறியாகும் அன்றாட வாழ்க்கை 50

செம்மணி மயானம் சீர்திருத்தப்படுமா? 53

திருநெல்வேலிச் சந்தையில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் 55

திருநெல்வேலி இந்து மயானம் புனரமைக்கப்படுமா? 57

கல்வி உலகில் பெண்களை மேம்படுத்தும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி 59

தண்ணீர்ப் பிரச்சினையால் பரிதவிக்கும் மண்டைதீவு மக்கள் கானல் நீரான எதிர்பார்ப்புக்கள் 63

மண்டைதீவில் பொதுச்சந்தை அமைவது எப்போது 65

மண்டைதீவு தில்லேஷ்வரன் ஆலயம் புனரமைக்கப்படுமா? 67

கல்வியங்காடு மாலைநேர மீன் சந்தை மீண்டும் எப்போது ஆரம்பமாகும் 69

மீண்டும் பொலிவு பெறுவதற்காகக் காத்திருக்கும் அல்லைப்பிட்டிக் கிராமம் 72

மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயம் எப்போது மீண்டும் ஆரம்பமாகும் 75

கட்டப்பிராய் கிராமத்தின் குறைபாடுகள் நீங்குவது எப்போது? 77

தேடிவரும் பக்த கோடிகளின் குறை தீர்க்கும் நயினை அம்பாள் 80

மண்டைதீவில் விவசாயச் செய்கை செழிப்படையுமா? 83

நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருக்கும் மண்டைதீவு கடற்கரை வீதி 86

## வாழ்த்துரை

எமது வீரகேசரி பத்திரிகையின் புகழ் பூத்த யாழ். பிராந்திய நிருபர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. நாகராஜா இராமச்சந்திரா ஜே.பி ஆவார். இவரது நீண்டகால பக்கம் சாரா பத்திரிகைப் பணியைப் பாராட்டி வேலணை பிரதேச சபை நடத்திய உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பத்திரிகைப் பணியோடு நிற்காமல், ஆக்க இலக்கியங்களிலும் ஈடுபட்டு வருகின்றார். இவர் சிறிது காலம் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் உப தலைவராகச் செயற்பட்டு பத்திரிகையாளர்களின் உரிமை களை வென்று எடுக்கக் கடினமாக உழைத்தவர்.

வடமராட்சி அல்வாய் கிராமத்தைத் தாயகமாகவும், மண்டைதீவுக் கிராமத்தைப் புகுந்த இடமாகவும் கொண்டவர். பழகுவதற்கு இனியவரான இவருக்கு குடாநாட்டில் தெரியாதவர்கள் ஒருவர் கூட இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்கு மக்களோடு அன்பாகவும் பண்பாகவும் நெருங்கிப் பழகி வருகின்றார்.

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்தில் தொடர்ந்து 04 ஆண்டுகள் தலைவராகப் பணியாற்றி ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்க கடினமாக உழைத்து வந்தவர். அத்தோடு சமய சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருவதோடு இறைசிந்தனையாளரான இவர் ஆன்மீகப் பணிகளி லும் ஈடுபட்டு வருகின்றார். பல சஞ்சிகைகளை நீண்ட காலமாக வெளியிட்டவர். இவர் மேலும் எழுத்துத்துறையில் நீடித்து நிலைத்து வாழ்க என வாழ்த்துகின்றேன். வாழ்க இவரது பணி.

நன்றி.

திரு. ஸ்ரீ. கஜன்,<br>
செய்தி ஆசிரியர்,<br>
வீரகேசரி நாளிதழ்.

# வாழ்த்துரை

கிராமிய வாழ்வு ஆக்கத்திறன் செயற்பாடுகளுக்கு வாய்ப்பாக அமைவது இயல்பானதே. ஏறத்தாழ 40ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகைத் துறையோடு ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் திரு. இராமச் சந்திராவிடம் இவ்வாக்கத்திறன் செயற்பாடுகள் அமைந்திருப்பதை அனை வரும் அறிவர்.

வீரகேசரிப் பத்திரிகையின் வேலணை நிருபராகப் பணியாற்றும் இவர் நல்ல பண்பாளர். நிதானமாகச் செய்திகளை எழுதும் ஆற்றல் மிக்கவர். உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சேகரிக்க விரும்பாத நேர்மையுடையவர். இனப்பற்றும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கொண்ட இவரின் பக்கம் சாராப் பத்திரிகைப்பணி பலரின் பாராட்டிற்கும் உள்ளானது.

இவர் அவ்வப்போது நளினி, கதிர், அருள்சுரபி முதலான காலாண்டுச் சஞ்சிகைகளையும், ஊழியன் மாதப் பத்திரிகையையும் முன்னின்று வெளியிட்டு நடத்தியவர். காலதேச வர்த்தமானச் சூழ்நிலை யால் இவ்விதழ்கள் தொடர்ந்து வெளிவரவில்லை. ஈழத்துத் தமிழ்ச் சிறு சஞ்சிகைகளிற் பெரும்பாலானவைக்கு ஏற்பட்ட "கதி" தான் இராமச் சந்திராவின் சஞ்சிகைகளுக்கும் ஏற்பட்டது. இதற்குக் காரணம் இராமச் சந்திரா அல்ல. நமது சமூகமே பிரதான காரணம் என்பதை இதழியல் வரலாற்றை ஆய்வு செய்தோர் அறிவர்.

கடினமான உழைப்பாளியான இராமச்சந்திரா கடவுள் பக்தி நிரம்பியவர். இவரது அருள்சுரபி என்ற சஞ்சிகையும் திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் மஹோற்சவ மலரும் இவரது பக்தி ஈடுபாட்டைக் காட்டப் போதுமானவை.

ஈழத்து பத்திரிகை உலகில் இவர் நீடித்து நிலைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன். வாழ்க இவர் பணி.

பேராசிரியர். எஸ். சிவலிங்கராஜா,
ஓய்வுபெற்ற சிரேஷ்ட தமிழ்த்துறை தலைவர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துரை

பிரபல பத்திரிகையாளரும் சமய சமூக சேவையாளருமான என். இராமச்சந்திரா அவர்கள் எமது மண்ணில் சைவநெறியும் தமிழ் மொழியும் தழைக்க சிறப்பாக ஆற்றிவரும் பணிகள் மகத்தானவையாகும்.

இன்னும் எனக்கு பசுமை நிறைந்த நினைவாக உள்ளன. கடந்த 1995 இல் யாழ். நகரில் இடம் பெயர்ந்து தென்மராட்சி சென்று பின்பு வன்னிப் பகுதிக்குச் சென்றும் மக்கள் அவல வாழ்க்கை ஒன்றை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில் வட பிராந்திய இந்துப் பேரவையின் இணைச் செயலாளரான இவர் எம்முடன் இணைந்து வன்னிப்பகுதியில் (கிளிநொச்சி) இந்து இளைஞர் மன்றங்களைப் புதிதாக அங்குரார்ப்பணம் செய்தும், செயற்படாத இந்து இளைஞர் மன்றங்களை புனரமைத்தும் இந்து சமய வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்.

கொழும்பு இந்து மன்றம் கிளிநொச்சி அரசாங்க செயலகம் ஊடாக அனுப்பிவைத்த ஒரு தொகை உலர் உணவுகள் பாதணிகள், உடுப்புக்கள், குழந்தைகள் பால் மா வகைகள் ஆகியவற்றை மிகவும் வறிய குடும்பங்க ளுக்கு கிளிநொச்சி அப்போதைய அரசாங்க அதிபர் முன்னிலையில் ஸ்கந்தபுரத்தில் வைத்து விநியோகித்து உதவிய நிகழ்வுகள்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என இலட்சியமாகக் கொண்ட இவர் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவார். மண்டை தீவு சிறுப்புலம் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய தேவஸ்தான திருப் பணிகளிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றார். இவரது பணிகள் தொடர வும், நீண்டகாலம் சீரும் சிறப்புடன் வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமான் திருவருள் துணை புரிய பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

தர்மதீபம் ப. சிவலோகநாத தேசிகர்,
பதில் அதிபர்,
அகில இலங்கை சமாதானநீதிபதி.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

# முன்னுரை

இலங்கையின் மூத்த பத்திரிகையான வீரகேசரி என்ற பத்திரிகை யின் மூத்த நிருபர் திரு. ஏன். இராமச்சந்திரா அவர்கள் வேலணை நிருப ராகக் கடந்த 35 வருட காலமாகக் கடமையாற்றி வருகின்றார். அசாதாரண மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை வாசகர்கள் கவரும் வகையில் கட்டுரைகளாகவும் எழுதுவதில் வல்லவர். இவரது கட்டுரைகள் போருக்கு முன்பும் பின்பும் மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளை களமாகக் கொண்டது. அனேக கட்டுரைகளை எழுதிய இவர் அவற்றில் சிலவற்றைத் தொகுத்து நூலுருவாக்கியுள்ளார். இந்த நூலில் உள்ள கட்டுரைகள் வீரகேசரியின் சகோதரப் பத்திரிகையான "யாழ். ஓசையில் தொடர்ந்து வெளியாகியது என்பது குறிப்பிடத்தக்கது.

நூலொன்றை அச்சேற்றுவது பிரசவத்திற்குச் சமனானது வேதனை கள் நிறைந்தது, பொறுப்புக்கள் நிறைந்தது. இந்த வகையில் ஆசிரியர் நூல்களை வெளியிட்டு ஈழத்து இலக்கிய உலகில் சாதனை புரிந்துள்ளார். தான் பிறந்த கிராமம், புகுந்த கிராமம், வாழும் கிராமம் ஆகியவற்றின் பிரச்சினைகள் மட்டுமல்ல யாழ்ப்பாணத்து மக்களின் பிரச்சினைகள் பலவற்றைத் தனது பேனாவுக்குள் அடக்கியுள்ளார். இங்குள்ள அவல நிலையை உலகத்தார்களும், பிற்சந்ததியினரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உணரும் வண்ணம் எழுதுவதில் வல்லவர் இவர்.

அவர் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல. சிறந்த கவிஞர், பக்திமான் .பல ஆக்கங்களையும் நூலாக வெளியிட்டுள்ளார். பெரியார்கள் மீதும், சொந்தங்கள் மீதும் அன்பும் கருணையும் கொண்டவர். இவர் இந்த நூலில் உள்ள கட்டுரைகளை குறையற வெளியிடவும், இன்னும் பல நூல்களை வெளியிடவும் வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

தமிழ் அறிஞர், குறளரசு கே.என். குணசேகரம்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்,
நல்லூர் கோட்டம்.

# என்னுரை

எனது இரண்டாவது நூலாக யாழ் ஓசை கட்டுரைகள் என்ற நூலை பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகின் றேன். வீரகேசரி பத்திரிகையின் சகோதரப் பத்திரிகையின் வெளியீடான யாழ். ஓசை தினசரியாக வெளிவந்த காலத்தில் அப் பத்திரிகையில் தொடர்ந்து எழுதிய கட்டுரைகளில் சிலவற்றைத் தெரிவுசெய்து நூல்வடிவில் வெளியிடுகின்றேன். எனது முதலாவது நூலுக்கு பெற்ற வாசகர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இந்த நூலுக்கும் கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

இந்த நூலில் பிரசுரமான சில கட்டுரைகளைத் தவிர வாசகர்கள் இந்த அவசர யுகத்தில் வாசித்து தெரிந்து கொள்வதற்காக சிறிய கட்டுரை களை எழுதுவதே நல்லதெனக்கருதி பல கட்டுரைகளை சிறியனவாக எழுதியுள்ளேன்.

யாழ் ஓசையில் எனது கட்டுரை தொடர்ந்து பிரசுரமானபோது சில வாசகர்கள் நாளை எந்தக் கட்டுரை பிரசுரமாகும் என ஆவலுடன் காத்து இருந்து வாசித்ததாக அறிகிறேன். இது எனது எழுத்துப்பணிக்குக் கிடைத்த வெற்றியெனக் கூறலாம். நடந்து முடிந்த போரின் காரணமா கவும் இடப்பெயர்வுகள் காரணமாகவும் எனது ஆக்கங்கள் பல தொலைந்து விட்டன. நூல்கள் வெளியிடுவது ஒரு பிரசவ வேதனைக்கு ஒப்பாகும் என புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவரின் கூற்று உண்மையானது ஆகும்.

வாழ்க்கைச் செலவு பலமடங்கு அதிகரித்துக் காணப்படும்

இன்றைய காலத்தில் அச்சுக்கூலியும் பலமடங்கு அதிகரித்துள்ளது. வாசகர்களின் நலன் கருதி குறைந்த விலையில் இந்த நூலை விற்பனை செய்து வருகின்றோம். இந்த நூலில் வரும் முதல் கட்டுரை வீரகேசரி நாளிதழில் பிரசுரமானது ஆகும்.

இந்த நூல் சிறக்க முன்னுரை வழங்கிய முன்னாள் நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளரும் பிரபல எழுத்தாளருமான தமிழ் அறிஞர், குறளரசு கே. வி. குணசேகரம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை ஓய்வு பெற்ற தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களுக்கும், பதில் அதிபர் தர்மதீபம் ப. சிவலோகநாத தேசிகர் அவர்களுக்கும், பின்பக்க அட்டையில் அறிமுக உரையை எழுதிய எனது இனிய நண்பனும், சிரேஷ்ட ஊடகவியலாளரும், "டான்" தொலைக் காட்சி நிறுவன இயக்குனருமான எஸ். எஸ். குகநாதன் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய சிரேஷ்ட ஊடகவியலாளரும், வீரகேசரி செய்தி ஆசிரியருமாகிய திரு. ஸ்ரீ. கஜனுக்கும், வீரகேசரி யாழ். கிளை அலுவலகத்தில் உதவியாசிரியராக பணியாற்றும் திரு. சுதர்சன் அவர்களுக்கும், யாழ் ஓசையில் பிரசுரமான கட்டுரைகளை நூல் வடிவில் வெளியிட அனுமதி அளித்த வீரகேசரி பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகரனுக்கும், நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய பாரதி பதிப்பகத்தினருக்கும், ஊழியர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

கலைச்சுடர் என். இராமச்சந்திரா
ஜே.பி.

14.04.2013

# அற்புத விநாயகன்
# தலங்காவலன்

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் திருநெல் வேலிக் கிராமமும் ஒன்றாகும். இது யாழ். நகருக்கு வடக்கே உள்ள நல்லூருக்கு அருகில் உள்ளது.

ஆதியில் தென் இந்தியாவிலுள்ள திருநெல்வேலிக் கிராமத்தில் இருந்து மக்கள் இங்கு வந்து குடியேறியதால் இக் கிராமமும் திருநெல் வேலி கிராமம் என அழைக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இக்கிராமம் நீர்வளமும், நில வளமும் நிரம்பப் பெற்றதோடு சைவப் பாரம்பரியத்திற்கும், பண்பாட்டுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இங்கு சைவமும் தமிழும் தலைநிமிர்ந்து வாழ்கின்றன.

இங்கு காலத்துக்குக் காலம் சைவப் பெரியார்கள், தமிழ் அறிஞர்கள், புத்தி ஜீவிகள் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகின்றார்கள்.

இலங்கையின் வட பகுதியில் உள்ள யாழ். பல்கலைக்கழகம் இக்கிராமத்தில் அமைந்து இருப்பதால் இக் கிராமத்துக்குத் தனிச் சிறப்பாகும்.

திருநெல்வேலிக் கிராமத்தில் அநேக சைவ ஆலயங்கள் அமைந்து இருந்தாலும் அவற்றுக்குள் மிகவும் பழமை வாய்ந்ததும் அற்புதங்கள்

நிறைந்த ஆலயங்களுக்குள் திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளை யார் ஆலயமும் ஒன்றாகும்.

இவ் ஆலயத்தின் வரலாறு தனித்துவமானதும் தொன்மையான தும் கூட.

யாழ்ப்பாணத்தை ஆண்ட பரராஜசேகரன் என்ன மன்னன் தனது குலதெய்வமான நல்லூர் சட்டநாதனுக்கு காவல் தெய்வமாக நான்கு திசைகளிலும் நான்கு பிள்ளையார் ஆலயங்களை அமைத்து வழிபட்டு வந்தான்.

அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் ஆலயம் நல்லூர் கைலாச பிள்ளையார் ஆலயம், வெய்யில் விழுந்த பிள்ளையார் ஆலயம், சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் இவை நான்குமாகும். இவ் ஆலயத்தின் அற்புதங்களை எழுதினால் எழுதிக்கொண்டே போகலாம். இவ் ஆலயம் ஆரம்பத்தில் அனிச்சில் மரம் ஒன்றுக்கு கீழ் சிறிதாக அமைக்கப்பட்டு அந்தணர் குடும்பம் ஒன்று பராமரித்து வந்தது. அந்தப் பரம்பரையைச் சேர்ந்த அந்தணர்களே இவ் ஆலயத்தை பரம்பரை பரம்பரையாகப் பரிபாலித்து வருகின்றனர்.

இவ் ஆலயத்தை அனிச்சிலடி பிள்ளையார் என்றும் முன்னோர்கள் அழைப்பதாகக் கூறப்படுகின்றது.

அமரர் சிவஸ்ரீ நா. சண்முகநாதக் குருக்களின் அயராத முயற்சியா லும் கடின உழைப்பாலும் இவ் ஆலயம் பொதுமக்களின் உதவியோடு முழுமையான ஆலயமாக மாறியுள்ளது.

இவரது மறைவுக்குப் பின்பு இவரது மகன் ச. கனகசபாவதி ஐயர் ஆலயத்தைப் பொறுப்பேற்று தந்தை போல சிறப்பாக நடத்தி வருகின்றார். வருடம் தோறும் ஆனிமாதம் மஹோற்சவம் 18 நாட்கள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. அத்துடன் சமய நிகழ்வுகளும் அவ்வப்போது தவறாது நடைபெறுகின்றது. இவ் ஆலயத்தின் அற்புதங்களையும் சிறப்புக்களையும் அறிந்த சைவ மக்கள் அநேகம் பேர்கள் யாழ். குடா நாட்டில் பல பாகங்களிலும் இருந்து வந்து தலங்காவலனை வணங்கிச் செல்வதைக் காண முடியும்.

# கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்துக்கு இராஜகோபுரம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கட்டப்பிராய் கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் அருள்மிகு அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் சகல வளங்களும் கட்டிடங்களும் நிரம்பப் பெற்றபோதும் மேற்படி ஆலயத்துக்கு இராஜ கோபுரம் ஒன்று இல்லாதது ஒரு பெரும்குறையாக இருந்து வந்தது.

அம்பாளுக்கு இராஜகோபுரம் ஒன்று பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கக் கட்டப்பிராய் வாழ் மக்கள் பெரும் விருப்பம் கொண்டு அன்னையின் அருளால் அதன் ஆரம்பப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இப் பணிக்கு கட்டப்பிராய் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் புரிந்துவரும் மக்களும் மிக்க விருப்பத்துடன் தங்களால் இயன்ற நிதி உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர். அத்துடன் மேற்படி கிராம மக்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் நிதி உதவிகள் தாராளமாக வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கட்டப்பிராய் கிராமத்தில் கோவில் கொண்டு நீண்ட காலமாக அமைந்து இருக்கும் இவ்வாலயத்தை இப்பகுதி மக்கள் பரிபாலன சபை ஒன்றை அமைத்து திறம்பட நிர்வகித்து வருகின்றனர். காலத்துக்குக் காலம் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டு ஆலயத்தை பரிபாலித்து வருகின்றனர்.

அம்பாளின் அற்புதங்களை எழுதினால் எழுத்தில் அடங்காது. வேண்டுவோருக்கு வேண்டுவனவற்றை அள்ளி வழங்கி வருகின்றாள் அம்பாள். அம்பாளின் அற்புதங்களைக் கேள்வியுற்ற அயல் கிராமத்தவர் களும் நேர்த்தியிட்டு நேர்த்தி நிறைவேறியதும் அம்பாளுக்கு பொங்கல் படைத்தும் அன்னதானம் வழங்கி வருவதைக் காணமுடிகின்றது. இதைவிட ஆடி மாதத்தில் நடைபெறும் அம்பாளின் வருடாந்த உற்சவத்தில் இக் கிராமத்திலிருந்து சென்று வெளிநாடுகளில் வசித்துவரும் மக்கள் விடுமுறையில் குடும்ப சகிதம் வருகை தந்து அம்பாளைத் தரிசித்துச் செல்வது வழக்கம்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளை இளம் பிராயத்திலிருந்து இறைவழிபாட்டை இறை சிந்தனையை ஊட்டி வளர்க்க வேண்டும். எமது சைவசமயம் மனித வாழ்க்கைக்கு நல்வழி காட்டுகின்றது. எமது சமயம் பழமை வாய்ந்தது. நமது முன்னோர் கட்டிக்காத்துப் பேணி வந்த சைவ சமயத்தை நாம் அனைவரும் பின்பற்றி இறை வழிபாட்டில் ஈடுபட்டு வருவோமானால் எமது வாழ்க்கையில் துன்பத்துக்கே இடமில்லை. நம்பினவர்களை இறைவன் என்றுமே கைவிட்டது கிடையாது.

புதிய இராஜகோபுரப் பணியில் ஈடுபட விரைவில் தமிழகத் திலிருந்து சிற்ப வல்லுநர் குழுவொன்று இங்கு வரவுள்ளதாக பரிபாலன சபை பொருளாளர் தெரிவித்தார். அவர்களுடன் இணைந்து உள்ளூர் சிற்பக் கலைஞர்கள் மற்றும் தென்னிலங்கையிலிருந்து வந்து சிங்கள சிற்பக் கலைஞர்களும் பங்குபற்றி வருவதைக் காணமுடிகின்றது.

இதற்கான கற்கள், மணல்கள்,கம்பிகள் போன்ற மூலப் பொருட் கள் ஆலய முகப்பில் குவிக்கப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. ஆலய இராஜகோபுரம் நிறைவேற நிதி மிகுந்தவர்கள் தங்களால் இயன்ற நிதி வழங்கி இராஜகோபுரம் நிறைவேற உதவ முன்வர வேண்டும்.

ஆலயத்தின் பெயரால் முத்துமாரி அம்மாள் அறங்காவலர் சபை கனடா கிளையை உருவாக்கி பல அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டு நம் உறவுகளை ஒன்று இணைத்து அவர்கள் மூலமாக வேண்டிய நிதியைச் சேகரித்து இராஜகோபுரத்தை நிர்மாணிக்க முடிவு செய்யப் பட்டது. மேலும் இங்குள்ள அன்பர்கள், தனவந்தர்கள் உதவியோடு கோபுரத்தின் உப கட்டமைப்புக்களை பொறுப்பேற்றுச் செய்ய முன் வந்தனர்.

அம்பாளின் அருளால் கடந்த 10.11.2011 பரணி நட்சத்திரத்தில் வந்த சுப நேரத்தில் இராஜகோபுரத்துக்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட த.வி.கூ. எம். பி. கந்தையா பிரேமச்சந்திரனால் சம்பிரதாய முறைப்படி அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. அன்றைய தினம் சிறப்பு விருந்தினராக கொடை வள்ளல் ஈ.எஸ்.பி. நாகரத்தினமும் கலந்துகொண்டு தன்னாலான பங்களிப்பைத் தருவதாகவும் உறுதியளித்தார்.

மேற்படி புதிய இராஜகோபுரத்தை பிரபல ஆலய நிர்மாண வல்லுநர் சந்திரன் ஒரு வருட காலத்துக்குள் செய்து முடித்துத் தருவதாக ஒப்பந்தம் செய்துள்ளார். மேற்படி கோபுர திருப்பணிகள் விரைவில் நிறைவேற அம்பாளின் அருட்கடாட்சத்தோடு அனைவரும் ஒன்று சேர்ந்து இத் திருப்பணியை முன்னெடுத்துச் செல்ல வாரீர் என இரு கரம் கூப்பி அழைக்கிறோம்.

## எங்களைக் காப்பாற்ற வேண்டும் தாயே

கற்றவர்கள், நல்லவர்கள், வல்லவர்கள் செறிந்து வாழ்ந்து வரும் கட்டப்பிராய் கிராமத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்துவரும் அன்னை முத்துமாரியே!

உனை அண்டி வாழும் ஏழை எளியவர்கள் துயர் தீர்த்து வைக்கும் அம்பிகையே!

உனை தினமும் நெஞ்சுருக பக்தியோடு வழிபட்டு வந்தால் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்து விடும் தேவியே!

அடியவர்கள் துன்பங்கள் அகற்றி அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து வரும் ஆதிபராசக்தியே!

காணும் இடமெல்லாம் கருணை வடிவமாகக் காட்சி தரும்
சர்வ மங்கள நாயகியே!

உனைப் பணிந்து வணங்கி வேண்டுகின்றோம்.

எங்கள் துயரங்கள் தீர்த்தருள வேண்டும் பரமேஸ்வரியே!

கலைச்சுடர்.

# யாழ். குடாநாடு எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகள்

யாழ் குடாநாட்டில் பல்வேறு பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, குடும்பச் சண்டைகள், கோஷ்டிச் சண்டைகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். அத்தோடு குடாநாட்டில் மதுப்பாவனையாளர்கள் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வாகன விபத்துச் சம்பவங்களும் அடிக்கடி இடம்பெறுவதன் காரணமாக பலர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். வீதிகளில் பொதுமக்கள், வாகனங்களின் அதி வேகத்தால் போக்குவரத்துச் செய்வதற்கு அஞ்சுகின்றனர்.

குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் வீதிகளைக் கடந்து செல்ல முடிவதில்லை. சைக்கிள்களில் பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துவிட்டு அவர்கள் வீடு திரும்பும் வரும்வரை தங்கள் குலதெய்வங்களை வேண்டிநிற்கின்றனர். குறிப்பாக பெண்பிள்ளைகளை பெற்ற பெற்றோர்கள் மிகவும் கவனமாக - அதிக அக்கறை செலுத்தி - கண்களை இமை காப்பது போல பாதுகாத்து வருகின்றார்கள்.

துன்பங்களைத் தேடி நாமே செல்கின்றோம். துன்பங்கள் எங்களைத் தேடி வருவதில்லை. ஆகவே பெற்றோர்கள், ஆசிரியர்கள், முதியவர்கள், புத்திஜீவிகளின் அறிவு முதிர்ந்த அறிவுரைகளைக் கேட்டு

ஒழுக்கமாகவும், சாதுரியமாகவும், சமயோசிதமாகவும் நடந்துவந்தால் பிரச்சினைகளுக்கு இடமே இருக்காது.

இந்த இடத்தில் முதியவர் ஒருவர் கூறிய அறிவுரை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அந்தக் காலத்தில் - நான் நினைக்கின்றேன் 60 வருடங்களுக்கு முன்பு இங்குள்ள பெண்பிள்ளைகளை 5ஆம், 6ஆம் வகுப்புக்களுடன் படிப்பதை நிறுத்தி விட்டு, அவர்களை வீட்டில் வைத்து அவர்களுக்கு அறிவான நூல்களையும் வாங்கிக் கொடுத்து படிக்க வைத்து அறிவுரைகள் கூறி, பட்டறிவுடன் கூடிய ஒழுக்கமான கல்வியை எம் முன்னோர்கள் புகட்டி வந்தனர். அத்தோடு, தங்கள் கட்டுப்பாட்டுக் குள்ளும் வளர்த்து வந்தனர். இதனால், பிரச்சினைகள் தோன்ற வழி இல்லாது அவர்கள் ஒழுக்கசீலர்களாக வளர்ந்து வந்ததாகத் தெரிவித்தார்.

அது அந்தக்காலம். இந்தக்காலம் கலியுக காலம். பெண் பிள்ளைகள் தங்களின் எதிர்காலம் நலன் கருதி, இன்று கல்வியில்கூடிய அக்கறைசெலுத்தி பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளைப் பெற்று முன்னுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். காரணம், தாங்கள் பரீட்சையில் சித்திபெற்று உயர்ந்த கல்வியைக் கற்று, உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற வேணவாவேயாகும். இதனால், யாழ். குடாநாட்டில் அநேக அரச திணைக்களங்களில் உயர்ந்த பதவிகளில் பெண்களே காணப்படுகின்றனர்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் சீதனப் பிரச்சினையால் எத்தனையோ இளம் பெண்கள் வாழ வழியின்றி வயது 35 ஐயும் தாண்டி நடைப்பிணமாக வாழ்வதையும் நாம் காணமுடிகிறது. சீதனம் கேட்பதில் ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்கள் தான் அதிக அக்கறை காட்டுவதாக நண்பர் ஒருவர் தெரிவித்தார். இது இவ்வாறிருக்க, சில பெண்கள் தங்களுக்குரிய துணையைத் தாமே தெரிவு செய்து பின்பு பெற்றோருக்குத் தெரிவித்தும் - சிலர் அவர்களின் சம்மதத்துடனும் - சிலர் சம்மதம் இன்றியும் திருமணம் செய்து கொள்கின்றார். இவர்களில் பலர் "ஆசை 60 நாள் மோகம் 30 நாள்" என மணவாழ்வு கசந்து, குறுகிய கால இடைவெளிக்குப் பின்னர் விவாகரத்துக் கோரி நீதிமன்றப் படிகளில் ஏறுவதை இங்கு சர்வசாதாரணமாக - பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பெற்றோர்களின் விருப்பப்படி அவர்களின் வாழ்த்துரையோடு இடம்பெறும் திருமணங்கள் அநேகமாக நீடித்து நிலைத்து நிற்கின்றன.

இது இவ்வாறிருக்க, இன்றைய யாழ்ப்பாண இளம் பெண்கள் சிலர் "கண்டதே காதல் கொண்டதே கோலம்" என்ற நிலையில் மக்கள் அதிகம் நடமாடும் பொது இடங்களில் தங்களை மறந்த நிலையில் பிற ஆண்க ளோடு சிறிதும் கூச்சமின்றி கைபேசிகளில் நீண்ட நேரம் உரையாடுவதும், பின்பு அவர்களை இரகசியமாக சந்திப்பதும் பின்னர் திரையரங்குகள், குளிர்பானக் கடைகள், புடைவைக்கடைகள் ஆகியவற்றுக்குச் சென்று "இனிமையாக" பொழுதுகளைக் கழித்து வருகின்றார்கள். இவ்வாறு இவர்கள் மத்தியில் துளிர்விடும் "திடீர் காதல்" திருமணங்களில் போய் முடிவடைகின்றதா எனக் கேட்டால் இல்லை என்றே பதில் வரும். சில இளம் பெண்கள் காதலிப்பது ஒருவர்; கழுத்தை நீட்டுவது வேறு ஒருவருக்கு என்ற நிலையில் உள்ளதை நாம் இன்றைய நவநாகரிக சமூகத் தில் காணமுடிகின்றது.

குடாநாட்டில் இளையோர்கள் மத்தியில் மதுபானம் பாவிப்பது ஒரு நாகரிகமான பழக்கமாக மாறிவருகின்றது. இதனால், சில இளைஞர்கள் தொடங்கி 80 வயது முதியவர் வரை மதுப் பாவனைக்கு அடிமையாகி வருகின்றனர். இளம் குடும்பஸ்தர்கள் மதுபாவனைக்கும், புகைத்தலுக்கும் அடிமையாகி தாங்கள் உழைக்கும் பணத்தில் பெரும் பகுதியை இத்தகைய துர்ப்பழக்கங்களுக்கு செலவிடுவதன் காரணமாக அவர்களைச் சார்ந்திருக்கும் அவர்களது மனைவியர், பிள்ளைகள் பல விதமான துன்பங்களைச் சந்திப்பதை அன்றாட வாழ்வில் காணக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக குடும்பச் சண்டைகள் பெருகி, வீண் மனஸ்தாபங்கள் ஏற்பட்டு, விவாகரத்துக்கள் பெருகி, இளம் குடும்பப் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் ஜீவனாம்சம் கோரி நிற்போர் தொகை அதிகரித்து வருவதாக வயோதிபர் ஒருவர் தெரிவித்தார்.

அத்தோடு, குடாநாட்டில் உள்ள வங்கிகளில் அதிக பணம் வைப்புச் செய்பவர்கள் மதுபான விற்பனையாளர்களே என வங்கியாளர் ஒருவர் தெரிவித்தார். இதே வேளை, கசிப்பு உற்பத்தி வீதம் தற்போது குறைந்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். வேண்டிய மதுபான வகைகளை இங்கு தாராளமாகப் பெறக்கூடியதாக உள்ளமையே இதற் குரிய காரணமாகும்.

இதேவேளை, யாழ். குடாநாட்டில் நோயாளர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. மாலை வேளைகளில்

இடம்பெறும் கிளினிக் மாலை 6.30 வரை இடம்பெறுகின்றது. அதற்குரிய காரணங்கள், மக்கள் இளம் வயதிலேயே தீய பழக்கங்களைப் பழகுவதால் குறைந்த வயதிலேயே நோயாளிகளாக மாறிவிடுகின்றார்கள்.

முன்பு 80 - 90 வயது வரை வாழ்ந்த மக்கள் இன்று விரைவில் நரை, திரை, மூப்பு ஏற்பட்டு 60 - 65 வயது வரையுமே வாழ்கிறார்கள். மக்கள் கட்டுப்பாடின்றி மனம் போன போக்கில் ஒழுக்கம் கெட்டு வாழ்வதே இதற்குரிய காரணமாகும்.

அத்தோடு பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்வதாலும் பல ஆண்கள் இளம் வயதிலேயே நோயாளிகளாக இறக்க நேரிடுவதாக ஒரு குடும்பஸ்தர் தெரிவித்தார். ஆகவே, எதிர்காலச் சந்ததியினர் மனக்கட்டுப் பாட்டுடன் ஒழுக்கசீலர்களாக வாழ்ந்தால் தங்கள் ஆயுளை நீடிக்க முடியும். அளவோடு பிள்ளைகளைப் பெற்று வளர்த்து அவர்களை சமூகத் திற்கு ஏற்ற நற்பிரஜையாக உருவாக்கும் பாரிய பொறுப்பு ஒவ்வொரு குடும்பப் பெண்ணினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. குடும்பப் பெண்கள் தங்கள் குடும்பங்களிலுள்ள வயதில் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளைக் கேட்டு முன்மாதிரியாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

**நற்சிந்தனை**

அன்பு தான் வாழ்வு, அதுதான் வாழ்வின் ஒரே
சட்டம் சுயநலம் என்பது இறப்பிற்குச் சமமானது.
இது இன்றும் என்றும் உண்மையானது.

– சுவாமி விவேகானந்தா.

# இல்லை என்றால் இயற்கை அன்னை நகைப்பாளே

யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்துப் போவது குறித்து பாவனையாளர்கள் அதிக விலை கொடுத்து மரக்கறி வகைகளை கொள்முதல் செய்யமுடியாமல் கஷ்ரப்படுகின்றார்கள்.

யாழ். குடாநாட்டில் சகல உணவுப் பொருட்களின் விலையேற்றத் தால் நாளாந்தம் உழைத்துச் சீவியம் நடத்துபவர்கள் சொல்லொணாத் துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். எமக்கு வேண்டியதை நாமே உற்பத்தி செய்தும் எஞ்சியதை விற்றும் அதிக பணத்தை இலாபமாகப் பெறமுடியும். வீட்டில் உள்ள காணித்துண்டை ஓய்வு நேரங்களில் பயன்படுத்தி எமக்குத் தேவையான மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து அதிக பலனைப் பெறமுடியும்.

இளைஞர்களும் யுவதிகளும் நண்பர்களுடன் வீண் அரட்டை அடித்து பொழுதைக் கழிக்காமல் வீட்டில் மரக்கறித் தோட்டம் அமைத்து அதில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வந்தால் வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்ய முடியும்.

பொதுச் சந்தைகளில் அதிக விலை கொடுத்து மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்யவேண்டிய அவசியம் வராது. நாற்று மேடைகளை அமைத்து அல்லது விலை கொடுத்து வாங்கியும் நாம் மரக்கறிக் கன்றுகளைப் பயிரிட்டு அதிக இலாபத்தைப் பெறமுடியும். இதைவிட்டு வீட்டுக் கொல்லைப்புறப் பகுதியில் பூசணி, சுரைக்காய்,

நீற்றுப் பூசணி போன்றவற்றை நாட்டி அதிக பயன் பெறலாம். இதைவிட வேலியோரங்களில் பயற்றங்காய், புடோல், பாகற்காய் போன்ற பயிர்களைப் பயிரிட்டு குறுகிய காலத்தில் அதிக இலாபம் பெறமுடியும்.

இது இவ்வாறிருக்க கீரை வகைகளைப் பயிரிட்டு வீட்டுக்குத் தேவையானவற்றைப் பெறலாம். பொன்னாங்காணி, பசளி போன்ற கீரை வகைகளை உணவுடன் சேர்த்துக் கொடுத்து வந்தால் குழந்தைகள் துரிதமாக வளர்ச்சி பெறுவதுடன் நோய்களை எதிர்க்கும் புரதச் சத்து கீரை வகைகளில் நிறைய உண்டு. தினசரி கீரையுடன் 1/4 கிலோ துவரம் பருப்பு சேர்த்து சமைத்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் குழந்தைகள் துரித வளர்ச்சி பெறுவார்கள். இவ்வாறு வீட்டில் எமக்குக் கிடைக்கும் மேலதிக நேரங்களில் வீட்டுத் தோட்டத்தைச் செய்து எமது அன்றாட வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். "காலமும் நேரமும் பொன்னானது" சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தினால் கஷ்டமில்லாத வாழ்க்கையை நாளாந்தம் அனுபவிக்கலாம்.

எழுதும் ஆற்றல் இறைவனின் கருணையால் கிடைப்பது

– எமர்சன்.

# பொது மலசலகூடங்களில் சுகாதாரம் பேணப்படுமா?

யாழ்ப்பாணத்தில் பொது இடங்களில் மக்கள் பாவனைக்காக அமைக்கப்பட்டிருக்கும் பொது மலசலகூடங்கள் பல உரிய முறையில் பராமரிக்கப்படாமல் இருப்பதனால் தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன.

மலசலகூடங்களைப் பராமரிப்பவர்களினதும் அதனைப் பாவிப்பவர்களினதும் அசமந்தப் போக்கே இதற்குக் காரணமாகும். "சுத்தம் சுகம் தரும்" "மலசலகூடத்தைத் துப்பரவாகப் பாவிக்கவும்" என மலசலகூடக் கட்டடங்களின் வெளியே எழுதப்பட்டிருக்கும். ஆனால் உள்ளே அதற்கு நேர் எதிரான செயற்பாடுகளே நடந்திருக்கும்.

யாழ் குடாநாட்டிலுள்ள சில பொது மலசலகூடங்களை பொதுமக்கள் நன்றாகத் தண்ணீர் ஊற்றித் துப்பரவு செய்யாமல் விடுவதால் துர்நாற்றம் வீசுவதோடு பல தொற்று நோய்களான வாந்தி பேதி, வயிற்றோட்டம் ஏற்பட்டு வருவதாக பாவனையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பொது மலசலகூடங்களைப் பாவிக்கும் மக்கள் தங்கள் வீட்டு மலசல கூடங்களை எப்படி துப்பரவாக சுத்தமாக பாவிக்கிறார்களோ அதே போல் பொது மலசலகூடங்களையும் பாவிக்க வேண்டும்.

சிலர் மலசலகூடங்களை பாவித்துவிட்டு தண்ணீர் ஊற்றி கழுவி துப்பரவு செய்யாமல் விட்டுவிட்டு செல்கின்றனர். இதனால் ஈக்கள் பரவி

பலவிதமான தொற்று நோய்கள் மக்களுக்கு ஏற்பட வழிபிறக்கிறது.

முன்பு பாவனையிலுள்ள வாளி, மலசலகூடங்கள் மக்கள் பாவிப்பு முறை ஒழிக்கப்பட்டு குழி, தற்போது பாவனையில் இருப்பது அனைவரும் அறிந்ததே. மலசலகூடங்கள் இல்லாத பிரதேச மக்களுக்கு மலசல கூடங்கள் அமைப்பதற்காக அரசால் சிறு தொகைப் பணமும் வழங்கப் பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரதேச பொது சுகாதார உத்தியோகஸ்தர்களை அணுகி இதற்கான வழிமுறைகளை தெரிந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

மக்கள் நோய்களின்றி நீண்டகாலம் வாழ பழகிக்கொள்ள வேண்டும். “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” மனக்கட்டுப் பாட்டுடன் ஒழுக்கமுள்ளவர்களாக வாழப் பழகினால் மக்களுக்கு நோய்கள் வரக் காரணமில்லை. எவ்வளவு செல்வம் இருந்தாலும் நோய்கள் பிடித்துக் கொண்டால் அத்தகைய செல்வத்தால் எதுவித பலனுமில்லை.

இதைவிட “கியுடெக்” போன்ற பொது அமைப்புக்கள் மீளக்குடியேறிய மக்களுக்கு பலவிதமான வசதிகளைச் செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. வீடுகளை மலசலகூடங்களை நிர்மாணித்து உதவி வருகின்றது.

இதேவேளை சில நிறுவனங்கள் மலசலகூடங்கள் நிர்மாணிக்க நிதியுதவிகளையும் வழங்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க மலசலகூடங்களில் பாவிக்கும் மக்கள் தங்கள் கைகளைச் சவர்க்காரம் போட்டு துப்பரவு செய்யும் பழக்கத்தை பழகிக் கொள்ள வேண்டும். அதோடு சிறு குழந்தைகள் மலசலம் இருந்தால் நன்றாகச் சவர்க்காரம் போட்டுக் கழுவி உலர்ந்த ஆடையால் துடைத்துவிட வேண்டும். சிறு குழந்தைகளுக்கு இலகுவில் தொற்றுநோய்கள் பிடித்துவிடுவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

எனவே பொது இடங்களில் மலசலகூடங்களை பாவிக்கும்போது எமக்குப் பின்னால் வருபவர் முறையாகப் பாவிப்பதற்கு ஏற்றவாறு சுத்தம் செய்து செல்ல வேண்டும். பொதுச் சொத்துக்களையும் எங்கள் சொத்துக்களைப் போல் பாவித்தால் ஆரோக்கியமான வளமான சமூகத்தை நாம் கட்டியெழுப்பமுடியும்.

# சைவமதம் காப்பாற்றப்படுமா?

*சைவமும் தமிழும் தலைநிமிர்ந்து வாழும் சிவபூமியாம் ஈழத் திரு நாட்டில் மதமாற்றம் மிக வேகமாக நடைபெற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு சைவ உலகம் கண்ணீர் சிந்துகின்றது. ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாக விளங்குகின்ற சிவன் முழுமுதற் கடவுளாவார். சிவனை வழிபடும் பழமையான சைவ சமயத்தின் அருமை பெருமைகளை உணராத சிலர் அற்ப சலுகைகளுக்காக இன்று மதம்மாறி வருகின்றார்கள். இது மிகவும் கவலைக்குரியது.*

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இளமைப் பருவத்திலிருந்தே இறை சிந்தனைகளை அத்தோடு சைவ சமயத்தின் சிறப்புக்களை ஊட்டி வளர்க்க வேண்டும். இன்று யுத்த அனர்த்தங்களால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டு வறுமையில் சிக்குண்டு தவிக்கும் குடும்பங்களைப் பிற மதத்தினரும் இனங்கண்டு அவர்களுக்கு உதவுவோர்கள் போல பாசாங்கு செய்து இலகுவில் மதமாற்றி வருகின்றார்கள். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் அல்லவா. சைவ மதத்தில் ஒருபோதும் வேற்றுமதத்தவர்களை வலிந்து இழுத்து சேர்த்தது கிடையாது. சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. நம் முன்னோர் கட்டிக்காத்த சைவசமயத்தை நாம் அனைவரும் வளர்த்தெடுக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டில் உள்ள சைவப் பாடசாலைகளில் மாணவர் களுக்கு ஆசிரியர்கள் சைவ சமயத்தின் சிறப்புக்களைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்தோடு சைவசமய மாணவர்கள் அனைவரும் வீபூதி அணிந்து பாடசாலைக்குச் சமுகம் கொடுக்க வேண்டும் என அதிபர்,

ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். இன்று யாழ். குடாநாட்டிலுள்ள சைவப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் வீபூதி அணிந்து செல்வதை காணமுடிவதில்லைஎன முதியவர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். இந்த நிலையில் எம்மால் எப்படி சமயத்தை வளர்க்க முடியும்.

நமது மத்தியில் சைவ நிறுவனங்கள் இருந்தும் இந்த மதமாற்றத் தைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது வேதனை தரும் செயலாகும். சைவசமய நிறுவனங்கள் தாமாகவே முன் வந்து ஏழை மக்களின் உடனடித் தேவைகளை அறிந்து அவர்களுக்கு அவ்வப்போது உதவுவதன் மூலம் இந்த மதமாற்றத்தைத் தடுக்க முடியும். அப்போது சைவ சமயத்தைக் காப்பாற்ற முடியும்.

அன்னியர் வருகையோடு எமது நாட்டில் ஆரம்பித்த மதமாற்றம் இன்றுவரை சங்கிலிபோல தொடர்ந்து காணப்படுகின்றது. ஆகவே எதிர்காலத்திலாவது சைவத்தின் மேன்மையை மக்களிடத்தில் உணர்த்தும் வகையில் நடவடிக்கையை எடுக்கவேண்டும். இன்று சிலர் பணம் பதவிகளுக்கும் வீடு, நிலம் போன்ற சொத்துக்களுக்கு அடிமைப்பட்டும் மண்டியிட்டும் மதம் மாறுகின்றார்கள். இந்த மாற்றத்திற்கு எதிராக நல்லை ஆதீனம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானம், இந்து மாமன்றம் போன்ற முன்னணி சமய நிறுவனங்கள் குரல் கொடுக்க வேண்டும்.

குடாநாட்டில் இன்று குறைந்தது வீட்டுக்கு ஒருவர் வெளிநாடுக ளில் தொழில் புரிந்து பணம் சம்பாதிக்கின்றார்கள். இவர்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை வறுமைப்பிடியில் சிக்கிய ஏழைக் குடும்பங்களுக்கு உதவ முன்வரலாம் அல்லவா? வேற்று மதத்தவர்கள் செய்துவரும் தொண்டுகளை விட எமது சைவ மக்கள் அதிகளவு தொண்டுகள் செய்யலாம். ஏழைகளின் புன்னகையில் இறைவனைக் காண முடியும்.

இன்று அனேகமானோர் விருந்தோம்பல் பண்பைவிட்டு விட்டார்கள். மருந்தே ஆயினும் விருந்து இட்டு உண் என்பார்கள். இதனால் வன்னியில் உணவுப் பஞ்சமே கிடையாது. இதே வேளை யாழ். குடாநாட்டில் சில இடங்களில் விருந்தோம்பல் பண்பை மருந்துக்கும் காண முடியாது என அன்பர் ஒருவர் வருத்தத்துடன் தெரிவித்தார்.

வீடுகளில் இடம்பெறும் சடங்குகளில் பிச்சைக்காரருக்கோ வறியவர்களுக்கோ தானம் செய்யும் பண்பு இப்போது இல்லை.

## ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுமா?

புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் நீண்ட காலமாக விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என பெற்றோர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக தீவகக் கல்வி அலுவலக அதிகாரிகளுக்குப் பல முறை முறைப்பாடு தெரிவித்தும் இதுவரை மேற்படி பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்காதது குறித்தும் பெற்றோர் தமது விசனத்தையும் தெரிவிக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்து வந்த மக்கள் தங்கள் சொந்த இடமான புங்குடுதீவுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் குறிப்பிட்ட பாடசாலையில் மாணவிகள் வரவும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றதென வித்தியாலய அதிபர் பஞ்சலிங்கம் தெரிவிக்கின்றார்.

தீவுப் பகுதியில் ஒரேயொரு பெண்கள் பாடசாலையான இப்பாடசாலை துரிதகதியில் அபிவிருத்தியடைந்து வருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இப் பாடசாலை அபிவிருத்தியில் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர். யுத்த அனர்த்தங்களால் இப் பாடசாலை பாதிக்கப்பட்டுள்ள போதும் படிப்படியாக முன்னேற்றம் கண்டு வருகின்றது.

பாடசாலைகளில் நிலவி வரும் குறைகளை உடனுக்குடன் பத்திரிகைகள் மூலமாக வெளிச்சம் போட்டுக் காட்டி அந்தக் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பாடசாலையில் ஆங்கில ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக வீரகேசரியில் செய்தி பிரசுரமான பிறகு இப்பாடசாலைக்கு இரு ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார்.

தீவுப் பகுதியில் பாடசாலைகளில் மாணவர்கள் தொகை அதிகரித்தபோதும் ஆசிரியர் தட்டுப்பாடு தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

இதனால் தீவக மாணவர்களின் கல்வித் தரம் வீழ்ச்சியடைந்துள்ளது. க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இதை நிரூபிக்கும்.

தீவகப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் யாழ். நகரிலிருந்து பஸ் எடுத்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வந்து செல்கின்றார்கள். இப்பகுதி மாணவர்கள் கல்வி அபிவிருத்தி கருதி தீவுப் பகுதிகளில் தங்கி நின்று கல்வி கற்பித்து வருவார்களானால் கல்வித் தரத்தைக் கூட்ட முடியும்.

தீவுப்பகுதி மாணவர்களுக்கு ஆதரம்பப்பிரிவிலிருந்து ஆங்கிலம் கற்று வந்தால் மேல் வகுப்புக்களில் அவர்களுக்கு ஆங்கிலத்தை இலகுவாகக் கற்க முடியும். அத்தோடு க.பொ.த.சாதாரண தரத்தில் அதிக மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைய முடியுமென பெற்றோர் ஒருவர் யாழ். ஓசைக்குத் தெரிவித்தார்.

தீவுப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் அநேகமானவைக்கு ஆசிரிய விடுதிகள் இல்லை. இதனால் தாங்கள் யாழ்.நகரிலிருந்து பஸ்களில் வந்துசேர வேண்டிய நிலை ஏற்படுவதாக வெளியூர் ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எமது யாழ். மாவட்ட தமிழ் எம்.பி.மார்கள் தங்கள் பன்முகப் பட்ட வரவு செலவுத் திட்டத்தில் தீவுப் பகுதிகளுக்குரிய ஆசிரிய

விடுதிகளை நிர்மாணிக்க பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். ஆசிரிய விடுதிகள் இருப்பின் போதிய ஆசிரியர்கள் யாழ். நகரிலிருந்து வரவேண்டியது இல்லை.

பஸ்ஸில் நெருக்குண்டு பாடசாலைக்கு வந்துசேரும் ஆசிரியர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குச் சமூகம் கொடுக்கமுடியாது கஸ்ரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே தீவக மாணவர்களின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட பாடசாலை அமைந்த இடத்திலேயே ஆசிரியர்கள் தங்கி நேரத்துக்குப் பாடசாலைக்குச் சமுகம் கொடுத்து தங்கள் கடமையை மேற் கொள்ளுவார்கள். அனால் தீவகப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்திய டையும்.



வீரகேசரி பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகரனுடன் பிராந்திய நிருபர்கள் யாழ் கிளை அலுவலகத்தில் சந்தித்தபோது எடுத்த படம்

# அழிக்கப்பட்ட பனை மரங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமா?

யுத்த அனர்த்தங்களால் தீவுப்பகுதிகளில் பல இலட்சம் பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் பனை வளவுச் சொந்தக்காரர் களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் பனம்பொருள் உற்பத்தி யாளர்களின் அன்றாட வாழ்க்கையிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. பல நூற்றுக்கு மேற்பட்ட தீவக மக்கள் பொருளாதார கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

குடாநாட்டில் அதிக பனை வளங்கள் நிரம்பிய இடங்களாக தீவுப் பகுதிகளும் மற்றும் வடமராட்சி, வலிகாமம் பகுதிகள் உள்ளன. மேற்படி இடங்களிலிருந்து அதிகளவு பனம்பொருள் உற்பத்திப் பொருட்கள் வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது.

அதோடு நாட்டில் ஏற்பட்ட அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து தினசரி பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் தென்னிலங்கையிலிருந்து வந்து செல்கின்றனர். இவர்கள் பனம்பொருள் உற்பத்திப்பொருட்களை மிகுந்த ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனால் தற்போது பனம் பொருள் உற்பத்திப் பொருட்களின் விலையும் அதிகரித்துள்ளது. இதேவேளை யுத்த காலங்களில் அழிந்துபோன பனைமரத் தோட்டக்காரர்கள் தங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கக் கோரி பனை அபிவிருத்திசபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்ச்சியாக கோரியுள்ளபோதும் இதுவரை எதுவித சாதகமான பதிலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என தீவக பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பனம் கள் போத்தல்களில் அடைக்கப்பட்டு வெளியிடங்களுக்கு அனுப்பிவைக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. பனை மரம் மனித வாழ்விற்கு அத்தியாவசியமான வளங்களுள் ஒன்றானதுடன் பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த கற்பகதருவும் ஆகும். அத்துடன் குடாநாட்டில் பனம் சாராயத்துக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு வருகின்றது. பாவனையாளர்களும் நாளாந்தம் கூடிக்கொண்டே போகின்றது.

இது இவ்வாறிருக்க யாழ். குடாநாட்டில் பல பாகங்களிலும் 10 இலட்சத்துக்கு மேற்பட்ட பனம் விதைகள் நாட்டும் திட்டத்தில் பனம் விதைகளை நாட்டி வருவதில் பனம் பொருள் அபிவிருத்தி சபை ஆர்வம் காட்டிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. பனை மரங்கள் அழிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்காது சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பனம் பொருள் அபிவிருத்தி சபை அதிகாரி கள் காலத்தை இழுத்தடித்து வருவது குறித்து மக்கள் கவலையையும் கண்டனத்தையும் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலக ரீதியாக பனை மரங்கள் அழிக்கப்பட்டவர்களுக்குரிய நஷ்டஈடுகள் விரைவில் வழங்கப்படுமா? பனை மரங்கள் அழிக்கப்படுவதற்கு தடை விதிக்கப்பட்ட போதும் சிலர் தங்கள் தேவைகளுக்கு அழித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. பனை அடி மரத்திலிருந்து நுனி மரம் வரை பயன்தரக்கூடியதாகும். அதோடு பணப் பொருள்களில் பனையும் ஒன்றாகும். எனவே பனை வளத்தைப் பாதுகாப்போம்.

**சிறப்புப் பெயர்கள்**

| | | |
|---|---|---|
| ஐரோப்பாவின் நோயாளி | – | துருக்கி |
| வெள்ளை யானைகளின் நிறம் | – | தாய்லாந்து |
| கடலின் ஆபரணங்கள் | – | மேற்கிந்தியத் தீவுகள் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | – | சுவிற்சலாந்து |
| நள்ளிரவுச் சூரியன் நாடு | – | நோர்வே |

# யாழ். குடாநாட்டில் தடையின்றி மின்சாரம் கிடைப்பது எப்போது?

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மின் சாரத் துண்டிப்பால் மக்கள் சொல்லொணாத்துயரங்களும் கஷ்டங்களும் அனுபவித்து வருகின்றார்கள்.

இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கும் வேளைகளில் திருடர் கள் வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டதை சுருட்டிச் செல்வதாக தெரிவிக் கப்படுகின்றது.

இரவு நேரங்களில் மட்டுமல்ல பகல் வேளைகளிலும் சில நாட்களிலே பகல் முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது. இதனால் பகல் வேளைகளில் வேலை செய்யும் இடங்களில் கணனிகளு டன் தொடர்புடைய வேலைகள் தடைப்படுகின்றன. பகல் நேர விழாக்கள், வீட்டுக் கொண்டாட்டங்களிலும் இதனால் இடையூறு ஏற்ப டுகின்றது.

இரவு நேரங்களில் திருடர்களுக்கு பயந்து இரவு முழுவதும் விழித்து இருக்கவேண்டியுள்ளதாக குடும்பஸ்தர்கள் கவலை தெரிவித்துள்ளனர். மாணவர்கள் இரவில் மின்சாரம் இல்லாது கற்றல் செயல்களில் ஈடுபட முடியாது கஷ்டப்படுகின்றார்கள். மீண்டும் விளக்கு வெளிச்சங்களில் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டியுள்ளது என பாதிக்கப்படும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

யுத்த காலத்தில் கூட மின்சாரம் இரவு நேரங்களில் துண்டிக்கப் பட்டது. இல்லை என மின் பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது வடக்கின் வசந்தம் என பாரிய அபிவிருத்தி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வரும் இக்காலத்தில் மின்சாரத்தை அடிக்கடி துண்டித்து மக்களை துன்புறுத்துகின்றது. இதேவேளை யாழ். குடா நாட்டில் வீதிகள் விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் மின்கம்பங்கள் புதிதாக இடமாற்றம் செய்யவேண்டியுள்ளது.

இடமாற்றம் செய்யும்போது மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. பின்னர் நீண்ட நாட்களின் பின்பே அதன் பணிகள் பூர்த்தி செய்யப் படுகின்றன.

தற்போது வீதிகளில் இரவு நேரங்களில் போக்குவரத்து செய்யும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. அதற்கு காரணமாக வீதிகளில் வீதி விளக்குகள் இல்லாமையே ஆகும். மிக முக்கியமான சந்திகள் மின்சார வெளிச்சம் இல்லாமல் இருளில் மூழ்கியுள்ளன.

இதனால் மின்சாரப் பாவனையாளர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக இப்பகுதி மக்கள் மின்சார சபை அதிகாரிகளுக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. இவ்வூரில் மின் துண்டிப்பு தொடர்கதையாகவே இருந்து வருகின்றது.

ஆகவே இனிமேலாவது இரவு - பகல் வேளைகளில் மின்சாரத்தைத் துண்டிக்காது இருக்க சம்பந்தப்பட்ட மின்சார சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். மின்சாரத்தை துண்டிப்பதால் சிறு கைத்தொழில்களும் இயங்காது இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடத்தில் பிரதேசசபை உறுப்பினர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளனர் என்பதை இங்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

# பயபக்தியோடு எளிமையாக ஆலயம் செல்லும் காலம் எப்போது வரும்?

யாழ். குடாநாட்டில் உள்ள சைவ ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. மேற்படி உற்சவங்களில் கலந்துகொள்ளும் ஆண்களும் பெண்களும் தங்கள் தங்கள் கிராமங்களில் உள்ள சைவ ஆலயங்களுக்குச் சென்று ஆசாரசீலர்களாகத் தொண்டுகள் செய்தும் பக்திபூர்வமாக வழிபட்டு தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிவருவதை காணமுடிகிறது.

சில குடும்பப் பெண்கள் தங்கள் அடிப்பெட்டிகளுக்குள் பூட்டி வைத்துள்ள விதவிதமான சாறிகளையும் உடுத்திக் கொண்டும் கழுத்து நிறைய தங்க ஆபரணங்களை அணிந்தும் இளம் பெண்கள் விதவிதமான கலர்களில் பஞ்சாபி சல்வார் அணிந்தும் மற்றும் நவநாகரீக உடை அணிந்தும் களியாட்ட விழாக்களுக்கு செல்வது போல் செல்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டில் திருட்டுச் சம்பவங்கள் தினசரி நடைபெற்று வருவதாக பத்திரிகைகளில் காணமுடிகின்றது. இவ்வாறான திருடர்களில் எத்தனை பேர் அகப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றார்கள். இன்று தங்கப்பவுணின் விலை 45 ஆயிரத்தையும் தாண்டிவிட்டது. அதனால், தங்க நகைகள் திருடும் திருடர்களும் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றனர். ஆலய உற்சவங்களுக்குச் செல்லும் பெண்களுக்கு தங்க ஆபரணங்கள் அவசியமா? துன்பங்களை நாங்களே தேடிக்கொள்கின் றோமே தவிர துன்பங்கள் எங்களைத் தேடி வருவதில்லை. ஆகவே ஆலய உற்சவங்களுக்குச் செல்லும் ஆண்களும், பெண்களும் தங்க நகைகள் அணிவதை தவிர்த்துக் கொள்வது நல்லதல்லவா? இந்த இடத்தில் ஒரு

சினிமா பாடலின் வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றது. "திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கும் அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக்கொண்டே இருக்கும். திருடனாப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது..." பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரத்தின் தத்துவப் பாடல் இது.

யாழ். குடாநாட்டில் அன்றாடம் உழைத்து சீவியம் நடத்தும் குடும்பங்கள் ஒருபுறம், கைநிறைய மாத வருமானம் பெறுவோர் ஒருபுறம் கொள்ளைலாபம் வைத்து விற்கும் வியாபாரிகள் இன்னொரு புறம் இதைவிட குடாநாட்டில் இன்று வீட்டுக்கு ஒரு ஆணோ பெண்ணோ வெளிநாடுகளில் உத்தியோகம் பார்த்து மாதம் மாதம் தங்கள் வீடுகளுக்குப் பெருந்தொகைப் பணத்தை அனுப்பி வருகின்றார்கள். இவர்களின் வீட்டுக்காரர்கள் அப்பணத்தை வங்கிகளில் மாற்றி மனம் போன போக்கில் செலவழித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். தங்கள் உறவுகள் வெளிநாடுகளில் எப்படி உழைக்கின்றார் கள் என்று இவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. பனியிலும், குளிரிலும் கஷ்டப்பட்டு உழைத்து அனுப்புவதை எவரும் உணருவதாக அறிய முடியவில்லை. இது இவ்வாறு இருக்க குடாநாட்டில் கலாசார சீரழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிய வருகின்றது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு சுதந்திரக் காற்று வீச ஆரம்பித் துள்ளது. வீதிகளில் ஒரே ஜனக்கூட்டம். அதோடு வீதிகளில் அதிக எண்ணிக்கையான வாகனங்களின் போக்குவரத்து. எங்கு பார்த்தாலும் வியாபார நிலையங்கள்.

இதேவேளை சில பெண்கள் அளவுக்கு மீறிய பண வருமானத்தால் தங்கள் தமிழ்ப் பண்பாட்டை மறந்து நவநாகரீக உடை அணிந்து நகர்ப்புறங்களில் பொழுதை இனிமையாகக் கழித்து வருவதால் சில விரும்பாத சம்பவங்கள் உருவாக அவர்களே வழிவகுத்துக் கொடுத்து வருகின்றார்கள். குறிப்பாக எந்த இளம் பெண்ணும் தமிழ் கலாசாரத்தைப் பேணும் வகையில் குங்குமப் பொட்டுடன்ஆடை உடுத்து பூவோடும் பொட்டோடும் வந்தால் எந்த ஆண்களும் காம இச்சையோடு திரும்பிப் பார்க்கமாட்டார்கள். தெய்வீக உணர்வு தோன்ற வழிபிறக்கும். ஆகவே நாம் ஒவ்வொரு அற்ப ஆசைகளுக்குள் அகப்படாது ஒழுக்கசீலர்களாக பொன் பொருள் ஆசை அற்றவர்களாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வந்தால் சமூகம் மதிக்கும்.

# தலைமன்னார் - தனுஷ்கோடி கப்பல்சேவை எப்போது?

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொழும்பு தூத்துக்குடி பயணிகள் கப்பல் சேவை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதேபோல் வெகு விரைவில் தலைமன்னார் தனுஷ்கோடிக்குமிடையிலான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதிக பணம் செலவு செய்து இந்தியாவுக்கு பிரயாணம் செய்து வந்த மக்களுக்கு இக்கப்பல் சேவை ஒரு வரப்பிரசாதமாகும் என பிரயாணி ஒருவர் யாழ். ஓசைக்குத் தெரிவித்தார்.

ஏ -9 பாதை திறக்கப்பட்டதும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான சிங்கள மக்கள் தினசரி யாழ். குடாநாட்டிற்கு வந்து செல்கின்றனர். இந்த நிலையில் யாழ். குடாநாட்டில் வாழும் இறை பக்தர்கள் ஆன்மீகவாதிகள் தமிழ் நாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களுக்கு குறைந்த பிரயாணக் கட்டணத்துடன் சென்று வழிபட்டுத் திரும்ப மிகுந்த ஆர்வமாக உள்ளனர். சைவமும் தமிழும் வளர்ந்த தமிழ் நாட்டில் அனேக சைவ ஆலயங்கள் திறம்பட இயங்கி வருவதை அனைவரும் அறிவார்கள். இதே வேளை மலையக மக்களும் இந்தியா வம்சாவழியினரும் குறைந்த கட்டணத்துடன் கப்பல் ஊடாகச் சென்று வர விருப்பம் தெரிவிக்கின்றனர். அத்தோடு முன்பு போல் இலங்கையிலுள்ள வியாபாரிகள் அடிக்கடி தமிழ் நாட்டிற்குச் சென்று பண்டமாற்று வியாபாரம் செய்து கொள்வதிலும் ஆர்வமாக உள்ளனர்.

# பெண்கள்
# வாழ்வைச் சிதைக்கும் சீதனம்

யாழ். குடாநாட்டில் சீதனம் என்னும் கொடிய அரக்கனால் எத்தனையோ இளம் பெண்கள் 35 வயதைத் தாண்டியும் வாழா வெட்டியாக விரக்தியின் விளிம்பில் வாழ்வதா, சாவதா? என்ற ஏக்கப் பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்றார்கள். பெண்களைப் பெற்ற தாய், தந்தையர்கள் ஆலயங்களில் அரச மரத்தைச் சுற்றுவதோடு, தமது குமர் கரை சேரவேண்டும் என தங்கள் குல தெய்வங்களை விழுந்து விழுந்து வணங்குவதைக் காணமுடிகின்றது.

ஆரம்பத்தில் தங்கள் பெண்கள் திருமணம் செய்கின்ற இடத்தில் இடர்கள் இன்றி மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று ஒருதொகைப் பணம், வீடு, நகை என கொடுக்க ஆரம்பித்தார்கள். இன்று இது ஆலமரமாக விழுதுவிட்டு வளர்ந்து, சீதனம் இல்லையேல் திருமணம் செய்யமறுக்கும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் உள்ளது. அண்மையில் வீரகேசரி பத்திரிகையில் மணமகன் தேவை என்னும் எமது யாழ். அலுவலகத்தில் விளம்பரம் செய்த தாய் ஒருவரைச் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அப்பெண்மணி கூறுவது எனக்கு நியாயமாகப்பட்டது. சீதனம் வாங்குவதை சட்டரீதியான குற்றமாகக் கருதி அரசு சட்டம் கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்ய முன்வந்தால் சீதனம் வாங்குவதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம். ஆனால், அப்பெண்மணி கூறுகையில், உனக்கு 5 பிள்ளைகள். அவர்களில் இரண்டு ஆண்கள், மூன்று பெண்கள். எனது கணவர் ஒரு சாதாரண கூலித் தொழிலாளி. அவரது நாளாந்த வருமானம் எமது சாப்பாட்டுக்கே போதாது. பெண் பிள்ளைகளுக்கு வயது 30 தாண்டிவிட்டது. திருமணம்

என்று பேசினால் வீடு, நகை, காசு என்று கேட்கின்றார்கள். நாங்கள் தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். நகருக்கு வந்தவர்கள். இந்த நிலையில், எனது பெண் பிள்ளைகளுக்கு திருமணமே இல்லையா? இது விடயத்தில் சமய நிறுவனங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள் மௌனம் சாதிப்பது ஏன்? யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் போன்ற அமைப்புக்கள் சீதனம் வாங்குவதைத் தடை செய்வதற்கு கோரிக்கை விடவேண்டும். சீதனக் கொடுமையால் பல இளம் பெண்கள் குடும்ப வாழ்க்கையை அனுபவிக்காது இருக்கின்றார்கள்.

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது. ஆண் ஒருவருக்கு பெண் ஒருவர் எங்கோ பிறந்து இருப்பார், காலம், நேரம் சரியாக வரும்போது எல்லாம் சரியாக வரும் என இன்னும் பழம்கதை பேசி காலத்தைக் கழிப்போர் எம் சமூகத்தில் உள்ளார்கள்.

கண்டதும் காதல் பின்பு விவாகரத்து என பல பிரச்சினைகளை நாம் காண்கின்றோம். திருமணம் பொருத்தம் பார்த்துச் செய்யும் பழக்கம் நம் மத்தியில் ஆரம்பத்தில் இருந்து வந்தது. ஆனால், கால மாற்றத்தில் அது இல்லாது போனது. காதல் திருமணம் செய்தவர்கள் கூட சீதனக் கொடுமையால் ஆசை 60 நாள் மோகம் 30 நாள் என்று முடிவுற்று சிலர் நீதிமன்றங்களில் குழந்தைகளுடன் வந்து நிற்பதைக் கண்டு அழுவதா? சிரிப்பதா?

**அம்பாளுக்கு கிழமை தோறும்**
**உகந்த நிவேதனம்**

| | | |
|---|---|---|
| ஞாயிறு | – | சர்க்கரைப் பொங்கல் |
| திங்கள் | – | பால்சாதம் |
| செவ்வாய் | – | வெண்பொங்கல் |
| புதன் | – | சாகான்னம் (கதம்பம்) |
| வியாழன் | – | எலுமிச்சம்பழச் சாதம் |
| வெள்ளி | – | பால்பாயாசம் |
| சனி | – | புளியோதரை |

# ஆரோக்கியமான வாழ்வுக்கான பழக்கவழக்கங்கள் மக்களிடத்தில் ஏற்படுமா?

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எவ்வளவு செல்வம் இருந்தாலும் நோய்வாய்ப்பட்டால் இங்கு நிறைய செல்வம் இருந்தும் சிறப்பில்லை. ஆகவே நாம் ஆரோக்கியமான உடல் வளத்துடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும். நாம் துன்பத்தைத் தேடி போகின்றோமே தவிர துன்பம் எங்களைத் தேடி வருவதில்லை.

நாம் எப்போதும் சத்துள்ள உணவுகளை அளவோடு உண்ண வேண்டும். அத்தோடு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வாழவேண்டும். நோயற்ற மனிதர்களாக நீண்டகாலம் வாழ வேண்டுமானால் மாமிச உணவுகளைத் தவிர்த்து சைவ உணவுகளைச் சாப்பிட்டு வரவேண்டும். இதனால்தான் நம் முன்னோர்கள் நீண்டகாலம் வாழ்ந்துள்ளனர். உடல் நலம் பேண தினமும் குளித்து உடல் சுத்தம் செய்ய வேண்டும். தினமும் காலை வேளையில் காலைக்கடன்களைத் தவறாது செய்யவேண்டும். வாரத்தில் இரு தடவை நல்லெண்ணை தடவி நீராட வேண்டும். தலை எப்போதும் காயாமல் எண்ணெய் தடவி தலை வாரிக்கொள்ள வேண்டும். இந்தப் பழக்கத்தில் ஒவ்வொருவரும் செய்து வந்தால் கண்கள் குளிர்ச்சியடைந்து முகத்திற்கு அழகையும் கொடுக்கும். அத்தோடு தலைவலி, கண்குத்து, காய்ச்சல், இருமல், தடிமன், பீனிசம் போன்ற நோய்கள் எம்மை ஒரு போதும் நெருங்காது. உடல் உஷ்ணம் பல நோய்களை தோற்றுவிக்கும். உடல் உஷ்ணத்தைத் தணிக்க மேல் குறிப்பிட்ட வழிமுறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும். முற்காலத்தில் கிராமங்களில் வாழ்ந்தவர்கள் "வைத்தியர்களுக்கு கொடுப்பதை வாணிபனுக்குக் கொடு" என்று கூறினார்கள். இதனால் வைத்தியனுக்குக்

கொடுக்கும் பணம் மிச்சமானது. ஆரோக்கியமான வாழ்வு மக்கள் மத்தியில் இருந்தது. இன்று அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்தும் உழைப்பாளிகளின் குடும்பங்கள் பணம் கொடுத்து நல்லெண்ணைய் வாங்கி உடலில் பூசி நீராடும் பழக்கத்தை கைவிட்டு விட்டனர் என்று ஒரு பெரியவர் தெரிவித்தார். இக்கூற்றில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. இதற்குக் காரணம் இன்று நல்லெண் ணைய் விலை பலமடங்கு உயர்ந்து விட்டது. மனித உடல் வளர்ச்சிக்கும் மருந்து தேவைகளுக்குமான உபயோகமான நல்லெண்ணைக்கு கட்டுப்பாட்டு விலையை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நிர்ணயம் செய்ய முன்வருவார்களா?

வருடத்தில் இரு தடவை பேதி மருந்து குடிப்பதால் உடலில் தங்கும் அசுத்தங்களை நீக்கி பித்தம், வாய்வு போன்ற நோய்களை நீக்கி விடலாம். அத்தோடு அளவுக்கு அதிகமாக அதிகரிக்கப்பட்டதை பேதிமூலம் குடலை விட்டு வெளியேற்றலாம். உடல் பருமையும் சோம் பலையும் போக்க தினமும் உடற்பயிற்சி செய்து வந்தால் உடலில் ஏற்படும் களைப்புத் தன்மை வியர்வையாக வெளியேறிவிடும். திடகாத்திரமான உடல் அமைப்போடு சுறுசுறுப்பாகவும் எந்த வேலைகளையும் களைப் பின்றியும் செய்து முடிக்கலாம். இவைகளை பின்பற்றி நோய்கள் அற்ற மனிதர்களாக நீண்டகாலம் வாழலாம். வாழமுடியும்.

**சிறப்புப் பெயர்கள்**

1) உலகின் மிகப் பெரிய கடல் துறைமுகம் உள்ள இடம்
சிங்கப்பூர்
2) ஆசியாவில் பழமை வாய்ந்த, இன்றும் இயங்கி வருவதுமான ஓட்டல்
கிரேட்ஈஸ்ட்ன் ஓட்டல்
3) கடலின் ஆழத்தை அளக்கப்பயன்படுத்தும் கருவி
ஃபாதோமீட்டர் (Fathometer)

# பொது ஆலயங்களின் பராமரிப்பில் கவனம் வேண்டும்.

யாழ். குடாநாட்டில் மூலை முடுக்கெல்லாம் சைவ ஆலயங்கள் நிறைந்து காணப்படுகின்றன. சைவசமயம் பழமை வாய்ந்தது. நமது முன்னோர்கள் கட்டிக்காத்த சைவ சமயத்தை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் அன்று ஆலயங்கள் நிர்மாணித்து வழிபட்டதுடன் சிறப்பாகப் பரிபாலித்தும் வந்தனர். இதனால்தான் இலங்கைத் திருநாட்டை சிவபூமி என அழைக்கின்றார்கள். இதைக் காலம் காலமாக சைவ மக்கள் பின்பற்றி வருகின்றனர். இங்குள்ள சைவ ஆலயங்களில் அனேகமானவை பரிபாலனசபையினர் பரிபாலித்துவரும் பொது ஆலயங்களாகும். தனியார் ஆலயங்கள் மிகக் குறைவு. பொது ஆலயங்களை ஆலய நிர்வாகமே ஆலய பரிபாலன சபை ஒன்றை உருவாக்கி ஆலயத்தைச் சிறப்பாக நிர்வகித்து நடத்தி வருகின்றன. ஒரு சில பொது ஆலயங்களின் பரிபாலன சபைகள் பொதுக்கூட்டங்களைக் கூட்டாமல் காலத்துக்குக் காலம் நிர்வாகிகளைத் தெரியாமல் இழுத்தடித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

பொது ஆலயங்களை நிர்வாக யாப்பு முறைக்கு அமைவாக வழிநடத்த வேண்டும். பொது ஆலயங்களை நிர்வகிக்கும் நிர்வாகசபை உறுப்பினர்கள் யாப்பு முறைப்படி நடந்து கொள்கின்றனரா? நிர்வாகம் கூட்டி தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றதா? நிர்வாகசபை கூடி ஒழுங்காக அறிக்கைகள் எழுதப்படுகின்றதா? அத்தோடு ஆண்டு முடிவில் வருடாந்த வரவு செலவு அறிக்கைகள் கணக்காய்வு செய்யப்பட்டு அச்சிட்டு மக்களுக்கு வழங்கப்படுகின்றதா? என்று அவதானிப்பது அப்பகுதி கிராம அலுவலகர்கள், கலாசார உத்தியோகஸ்தர்கள் ஆகியோரின் கடமையாகும்.

பொது ஆலயங்கள் ஆலய பரிபாலனசபை யாப்பின்படி ஆலயங்கள் பரிபாலிக்கப்படுகின்றதா என்று அவதானிக்க வேண்டும். அவதானிக்க வேண்டியவர்களே சிலர் பேசாமடந்தைகளாக காலத்தைக் கழிக்கின்றனர். தங்கள் கடமைகளைக் கூட திறம்படச் செயற்படுத்தாது இருந்து வரும் அதிகாரிகளைக் கண்டு அழுவதா... சிரிப்பதா... அரச ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர செய்து மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

ஆலயங்களைத் திறம்பட நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு ஆலய பரிபாலனசபையினது கடமையாகும். ஆலய கட்டடப்பணிக்காக, ஆலயப் பராமரிப்புக்காக வந்து குவியும் பணத்தினை முறையாகக் கையாளவேண்டும். ஆலயத்தின் பங்குள்ள அனைத்து மக்களும் அறியப்படும் படியாக அவற்றின் கணக்கு வழக்குகளைக் காண்பிக்க வேண்டும். ஊழல்கள் மோசடிகள் அற்ற நிர்வாகக் கட்டமைப்பை இங்கிருந்து ஆரம்பித்தோமானால்தான் எதிர்கால சந்ததியினருக்கு நல்லதோர் பண்பாட்டை வளமாக்கிக் கொடுக்கமுடியும். சிந்திப்போம். அதற்கேற்ப செயற்படுவோம்.

* பிறந்தோம் வளர்ந்தோம் என்பதை விட இறந்தும் நம் பெயர் நிலைப்பதாய் வாழ்வதே வாழ்க்கை.

* தோல்வியடைந்தோம் என்பதை விட வெற்றி காண முதற்படியை கடந்தோம் என நினையுங்கள்.

* கேட்டவற்றையெல்லாம் நம்பாதீர்கள். அப்படி நம்பினாலும் அதனை பிறருக்குச் சொல்லாதீர்கள். ஏனெனில் எல்லாருடைய மனமும் ஒரே கோணத்தில் சிந்திப்பதில்லை.

# மண்டைதீவுக்கு மின்சாரம் எப்போது?

மண்டைதீவுப் பகுதியில் யுத்த அனர்த்தத்தால் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் பெற்றுத் தருமாறு இப்பகுதி மின் பாவனையாளர்கள் மற்றும் இப்பகுதி பொது அமைப்புக்கள் மிக நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இலங்கை மின்சார சபையின் யாழ். கிளை இதற்கான எதுவித நடவடிக்கையும் எடுக்காது காலத்தை வீணடித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அமைதியான சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வன்னிக்கும் மற்றும் நலன்புரி முகாம்களுக்கும் சென்ற மக்கள் தங்கள் சொந்த இடமான மண்டைதீவுக்கு குடும்பமாகத் திரும்பி வந்து குடியேறியுள்ளார்கள்.

இவர்களது பல்வேறுபட்ட அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாது உள்ள போதும் தமது சொந்த மண்ணில் வாழ்கின்றோம் என்ற மனத்திருப்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இப்பகுதி மீனவர்கள் தாங்கள் தினசரி பிடிக்கும் மீன்களில் விற்பது போக எஞ்சியதை மறுநாள் பாதுகாப்பாக வைத்து எடுப்பதற்கு குளிரூட்டிகள், மின்சாரம் இன்றி இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தாம் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், மின்சார வசதி இருந்தால் குளிரூட்டி மூலம் எஞ்சியுள்ள மீன்களைப் பாதுகாக்க முடியும் என்றும் மீனவர் ஒருவர் வெறுப்போடு கூறுகிறார்.

இதேவேளை மின்சார வசதியின்மையால் மாணவர்கள் குப்பி விளக்குகளில் தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இதே வேளை, ஒரு சிலர் மின்பிறப்பாக்கியின் (ஜெனரேட்டர்) உதவியுடன் மின் வெளிச்சம் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மின்சார வசதி இன்மையால் இப்பகுதியில் திருட்டுச் சம்பவங்களும் அதிகரிக்கின்றன. இனந்தெரியாத திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டதைத் திருடிச்செல்கின்றார்கள். கோழிக் களவு முதல் நகைத் திருட்டு வரை நாளாந்தம் நடப்பதால் மக்கள் போதிய நித்திரை இன்றி பயத்தோடும் பீதியோடும் விழித்திருக்கின்றார்கள்.

மண்டைதீவு மகா வித்தியாலயத்திற்கு மின்சாரம் வசதி இல்லாததால் கணினிக் கல்வி கற்கமுடியாதுள்ளதாக இங்கு வாழுகின்ற கல்வி கற்கும் மாணவர்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர். எங்கும் - எதிலும் கணினிமயமாக மாறிவரும் இக் காலகட்டத்தில் இப் பகுதி மாணவர்கள் பாடசாலைக் காலத்தில் கணினிக் கல்வியைக் கற்க முடியாதவர்களாக இருக்கின்றனர்.

யுத்தத்தால் துண்டிக்கப்பட்ட மின்சாரத்தை மீண்டும் பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிவந்த போதும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என இவ்வூர்ப் பெரியவர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, அருகில் உள்ள அல்லைப்பிட்டிக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கிய மின்சார சபை, மண்டைதீவுக் கிராமத்தை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கின்றதா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள்.

போர் முடிந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னரும் யாழ்ப்பாணத்தின் பல கிராமங்கள் இன்னமும் போர்க்காலச் சூழலில் இருந்ததைப் போலவே இருக்கின்றன. குடிதண்ணீர், மின்சாரம், வீதிப் புனரமைப்பின்மை போன்ற பிரச்சினைகள் மிக நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் இப்போதும் இழுத்தடிக்கப்பட்டே வருகின்றன. நாட்டின் அபிவிருத்தியில் அக்கறையுள்ள அரசாங்கம், இவ்வாறு கிராமங்களில் நிலவும் வாழ்வாதாரப் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்துத் தீர்க்க முன்வர வேண்டும்.

குறிப்பு :- மின்சாரம் அண்மையில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலை மீண்டும் எப்போது திறக்கப்படும்?

யுத்த அனர்த்தங்களால் மண்டைதீவுப் பகுதியில் பாதிக்கப்பட்ட அரச கட்டிடங்களில் மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலையும் ஒன்றாகும். இவ் வைத்தியசாலை சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டு சிறப்பாக இயங்கிவந்தது.

கடந்த 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதங்களுக்குள்ளாகி முற்றிலும் பாதிப்படைந்து தற்போது நீண்டகாலமாக இயங்காத மூடப்பட்ட நிலையில் இருந்து வருவது குறித்து இப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, மண்டைதீவு ஆஸ்பத்திரி வீதியில் குடியிருந்த குடிமக்கள் மீளக்குடியேறாத காரணத்தால் ஆஸ்பத்திரியை வேறு இடத்தில் நிர்மாணித்து நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மண்டைதீவு மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேறும் பட்சத்தில் மக்கள் மீளக் குடியேறி அன்றாட இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பார்கள். ஆனால் மக்கள் வாழ்வதற்கு தொழில் வசதிகளையும் அன்றாட தேவைகளையும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். இதை விடுத்து மக்கள் மீளக் குடியேறாத காரணத்தால் அபிவிருத்திப் பணிகளை முடக்குவது கவலைக்குரிய விடயமாகும்.

தீவுப் பகுதிகளில் நவீன வசதிகள் கொண்ட பல கட்டிடத் தொகுதிகள் கொண்டவை இவ் வைத்தியசாலை. அப்போதைய கிராம சபைத் தலைவர் க. கைலாயபிள்ளை, கிராமத் தலைவர் மு.நவரட்ணராஜா போன்ற சைவப் பெரியார்களின் பெரு முயற்சியால் இவ் வைத்திய சாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு வந்தது. இவ் வைத்தியசாலையை 50 ஆண்டுகளுக்கு முன்பு அப்போதைய பிரதமர் சேர். ஜோன். கொதலாவலை அவர்களால் திறந்து வைக்கப் பட்டது.

இவ் வைத்தியசாலையை அயற்கிராமமான அல்லைப்பிட்டி பகுதி வாழ் மக்களும் தங்கள் வைத்திய தேவைகளை மேற்படி வைத்தியசாலை ஊடாக நிறைவேற்றி வந்தனர். இதன் காரணமாக மண்டைதீவு அல்லைப் பிட்டி கடல் வீதி நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மேற்படி வைத்தியசாலை இயங்காது நீண்ட காலம் இருந்து வருவதால் அல்லைப்பிட்டி வாழ் மக்கள் தங்கள் வைத்திய தேவைகளை நிறைவேற்ற யாழ். போதனா வைத்தியசாலை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் இப்பகுதி கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள், முதியவர் கள் சொல்லெணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். ஆகவே மண்டைதீவுக் கிராமத்தையும் இணைக்கும் கடல் வீதியை புனரமைத்து மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையை மீண்டும் ஆரம்பித்தால் இவ் இரு கிராம மக்களின் வைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இதை விடுத்து மக்கள் மீளக்குடியேறாத பட்சத்தில் மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையை வேறு இடத்தில் ஆரம்பிக்க முயற்சிப்பதை எதிர்த்து இப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பையும் ஆட்சேபனையும் தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே மக்களின் அன்றாட பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும்.

இவ் வைத்தியசாலை புனரமைப்புப் பணிக்கு சில வருடங்களுக்கு முன்பு நிக்கொட் நிறுவனம் 90 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்ட போதும் எவரும் ஒப்பந்த அடிப்படையில் புனரமைக்க முன்வராத காரணத்தால் இன்று வரை இவ் வைத்தியசாலை புனரமைக்காது காணப்படுகின்றது.

இதன் கட்டிட உபகரணங்கள் நாளாந்தம் இனம் தெரியாத திருடர்களால் திருடிச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்படி வைத்தியசாலைக்குப் பாது காப்பு உத்தியோகஸ்தர்களை நியமித்து கட்டிடங்களையும் வைத்திய சாலை உபகரணங்களையும் பாதுகாத்து வரவேண்டும். அப்படி பாது காக்க முன்வந்தால் வைத்தியசாலை உபகரணங்களைப் பாதுகாக்க முடியும் என மக்கள் தெரிவிக்கின்றார்கள். ஒரு கிராமத்தின் வளர்ச்சி வைத்தியசாலையிலும் பாடசாலைகளிலும் தங்கியுள்ளது. இவைகளில் ஒன்று இயங்காத பட்சத்தில் அக் கிராமம் முன்னேற்றம் அடையாது என்பது புத்திஜீவிகளின் கருத்து.



கலைச்சுடர் பட்டம் பெற்றதையிட்டு யாழ். கிளை அலுவலகத்தில் நூலாசிரியர் அளித்த மதிய விருந்தில் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றியுரை ஆற்றும்போது எடுத்த படம்

# கல்வியங்காடு எனும் இடத்தில் செங்குந்தா இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணத்தின் சிகரம் போன்று துலங்குவது நல்லூர் என்ற சிற்றூர் ஆகும். அதற்கு வடக்கே பெயர்பெற்று விளங்கும் திருநெல்வேலிக் கிராமம் ஆகும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டின் திருநெல்வேலி என்னும் இடத்தில் இருந்து வந்தவர்கள் இங்கு குடியேறிய காரணத்தால் இக்கிராமமும் திருநெல்வேலி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது. அதோடு பசு வதையை எதிர்த்து பாரதம் சென்ற அமரர் ஞானப்பிரகாசா முனிவர் கால் பதித்த இடமாக இக் கிராமம் சிறப்புப் பெறுகின்றது.

இக் கிராமத்தில் அமரர் சேர். பொன். இராமநாதன் அவர்களால் ஆண்பிள்ளைகளுக்கு என்று பரமேஸ்வராக் கல்லூரி ஒன்றை பெரும் செலவில் நிர்மாணித்து நடத்தி வந்தவர். இதுவே தற்போது யாழ். பல்கலைக்கழகமாக தலை நிமிர்ந்து பல சிறப்புகளுடன் காணப் படுகின்றது. அதை அடுத்து திருநெல்வேலி கல்வியங்காடு எனும் இடத்தில் செங்குந்தா இந்துக் கல்லூரி என்னும் கல்லூரி ஆரம்பத்தில் கந்த சக மண்டபம் என்னும் பெயருடன் நிறுவப்பட்டு வளர்ந்து வரும் காலத்தில் இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களால் திருநெல்வேலி சைவ விருத்திச் சங்கத்தால் பல ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்கப் பட்டு நடாத்தப் பட்டது. சகல வளங்களுடனும் நிர்மாணிக்கப்பட்டு இன்று 75 ஆண்டுக்கு மேல் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேற்படி கல்லூரியில் பல அதிபர்கள் கடமையாற்றிச் சென்றாலும் குறிப்பிட்டு எழுதக்கூடிய சைவத்திற்கும் தமிழுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கடந்த கால நூற்றாண்டுகளுக்கு மேலாக இக் கல்லூரியின் அதிபராக

அலங்கரித்து இக் கல்லூரியை தனது இரு கண்கள் போல் வளர்த்து எடுத்தவர் யாழ். பண்ணாகத்தைச் சேர்ந்த அமரர் நா. கணபதிப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர்.

இவரது காலம் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம் என குறிப்பிடலாம். இவரது காலத்தில் அடியேன் உட்பட பலர் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்விமான்களாகவும், பொறியியலா ளர்களாகவும், டாக்டர்களாகவும், தொழிலதிபர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

ஆரம்பத்தில் இக் கல்லூரி கட்டிட வளங்களின்றி சிறு கட்டிடங் களுடன் இயங்கியது. காலத்திற்கு காலம் கடமையாற்றிய அதிபர்களின் பெரு முயற்சியாலும் பெற்றோர் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடும் இக் கல்லூரி இன்று விண்ணைத் தொடும் பல மாடிக் கட்டிடங்களாலும் சகல வளங்கள் நிரம்பப்பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக யாழ். குடாநாட்டில் புகழ்பூத்து விளங்குகின்றது.

இங்கு கல்வி கற்ற மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டுத்துறை களிலும் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை தேடித் தருகின்றார் கள்.

மேற்படி பாடசாலை ஆரம்பத்தில் தரம் 1 தொடக்கம் க.பொ.த.(உ.த) வகுப்பு வரை நடத்தப்பட்டு வந்தது. இடப்பற்றாக்குறை காரணமாக பின்பு 6ஆம் ஆண்டுக்கு மேல் க. பொ.த. (உ.த) வகுப்பு வரை கலைப்பிரிவிலும் வர்த்தகப் பிரிவிலும் நடத்தப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் 1750க்கு மேற்பட்ட மாணவர்களும் 50க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கல்வி கற்பித்து வந்தனர்.

இக்கல்லூரி வரலாற்றில் திறம்பட நடத்தி கல்லூரிக்கு சிறப்பையும் புகழையும் தேடித்தந்த அதிபர்கள் சிலரை குறிப்பிட்டு கூற வேண்டும். அமரர் நா. கணபதிப்பிள்ளை, எஸ்.பி. நடராசா, அமரர் மு. பரமேஸ்வரன், ம. சண்முகலிங்கம், ஒய்வு பெற்ற அதிபர் திருமதி விஸ்வலிங்கம் ஆகியோர்களை குறிப்பிட்டுக் கூறலாம். ஆரம்ப காலத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தலைமை ஆசிரியராக இருந்த அமரர் சரவணமுத்து நடராசா அவர்களின் சேவை அளப்பரியது. அத்துடன் இங்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வரும் அனேக

மாணவர்கள் சகல துறைகளிலும் சாதனை படைக்கக் காரணமாக சில ஆசிரியர்களை குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

சிவசரவணபவன்(சிற்பி), என். சுந்தரலிங்கம், திருமதி ம. இராசேந்திரம், ம. சண்முகலிங்கம், ம. கந்தசாமி, மு. பரமேஸ்வரன், திரு. சண்முகராசா, திருமதி பவளராணி சண்முகராசா, திரு. ம. பரமேஸ்வரன், திருமதி பவானி சண்முகலிங்கம், திருமதி ரூபராணி இராஜரட்ணம், அமரர்கள் த. நவரட்ணம், திருமதி காங்கேயன், திருமதி பவளராணி தில்லைநாதன், திருமதி ப. ஞானசேகரன், திருமதி க. கிட்னர் உட்பட பலர் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க துறைகளில் சாதனை படைக்க வழிவகுத்தவர்கள். அவர்களில் ம. சண்முகலிங்கம் (நாடகம்), சரவணபவன்(சிற்பி) கலை இலக்கியம் மேற்படி இருவரும் இக் கல்லூரியின் பெரும் புகழும் ஓங்கி வளர அயராது உழைத்தவர்கள். அவர்கள் உருவாக்கிய மாணவர்களில் நாடகத்துறையில் அமரர் பத்மநாதன், க. பரராஜசிங்கம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலை இலக்கியத்துறையில் ஆசிரியர்கள் சிவசரவணபவன்(சிற்பி) திருமதி பவளராணி சண்முகராசா ஆகிய ஆசிரியர்கள் குறிப்பிடத்தக்கவர் கள். எழுத்துத்துறையில் மாணவர்கள் திருமதி சுந்தரலிங்கம், கோமளாதேவி, திருமதி அன்னலட்சுமி இராஜதுரை (யாழ்நங்கை), எஸ். திருச்செல்வம், க. பரராஜசிங்கம்(துருவன்), கலைச்சுடர் என். இராமச் சந்திரா, அமரர் சசி கிருஸ்ணமூர்த்தி (கட்டப்பிராய்) போன்றவர்கள் புகழ் பூத்த பத்திரிகையாளராகவும் விளங்கி கல்லூரிக்கு பெயரையும் புகழையும் தேடித்தந்தவண்ணம் உள்ளனர். மில்வைற் தொழிலதிபர் திரு. இ. தவகோபால், ஓய்வு பெற்ற பெரும்பாக உத்தியோகத்தர் நா. குழந்தை வேலு, ஓய்வுபெற்ற பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இன்னும் பலர் பல துறைசார் துறைகளில் இலை மறை காய்போல் விளங்கி கல்லூரிக்கு பெயரையும் புகழையும் தேடித் தந்த வண்ணம் உள்ளனர்.

# மண்டைதீவு நெசவு நிலையம் மீண்டும் இயங்குமா?

யுத்த அனர்த்தங்களால் அழிந்து தரைமட்டமான மண்டைதீவு நெசவு நிலையக் கட்டடத்தை மீண்டும் புதிதாக நிர்மாணித்து, இப் பகுதி ஏனைய இளம் பெண்கள் வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்து உதவுமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

இப் பகுதி இளம் பெண்கள் மேற்படி நெசவு நிலையத்தில் பணிபுரிந்து தமது அன்றாட வாழ்க்கைக்குரிய பணத்தை சம்பாதித்து வந்தனர். இந்த நெசவு நிலையம் அழிந்த பின்பு தொழில் வாய்ப்பு இன்றி மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகப் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர் "யாழ் ஓசை"க்குத் தெரிவித்தார்.

சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்படி நெசவு நிலையம் நீண்ட காலமாக இயங்கிவந்தது. இந்த நிலையம் மண்டைதீவு - சிறுப்புலம் மைதானத்தில் இயங்கிவந்தது.

மேற்படி நெசவு நிலையத்தை மீண்டும் நிர்மாணித்து இப்பகுதி ஏழை இளம் பெண்களுக்கு உதவ சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும்.

நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலையில் மண்டைதீவில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று குடியேறியவர்கள் தற்போது தங்கள் சொந்த ஊரான மண்டைதீவுக்குத் திரும்பி வருகின்றனர்.

மண்டைதீவுப் பகுதியில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாக நிர்மாணிக்க யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவில் பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். இதனால், பல இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றிக் கஷ்டப் படுகின்றனர்.

இதேவேளை, மண்டைதீவுப் பகுதி கோழி வளர்ப்புக்கு ஏற்ற காலநிலை, வசதிகள் உள்ள கிராமமாகும். இங்கு உள்ள அனேக இளம் பெண்கள் கோழிகள் வளர்த்து அதிக இலாபம் பெற்று வந்தனர்.

யுத்தச் சூழ்நிலையால் மண்டைதீவு மக்கள் நடத்திவந்த கோழிப்பண்ணைகள் அழிந்துவிட்டன. முன்பு இங்குள்ள கோழிப்பண் ணைகளிலிருந்து பெருந்தொகையான முட்டைகள் யாழ். நகருக்கு எடுத் துச் சென்று விற்கப்பட்டன.

ஆகவே யுத்த அனர்த்தங்களால் பாதிப்புற்ற கோழிப்பண்ணையா ளர்களுக்கு மீண்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நஷ்ட ஈடுகளை வழங்கி தொடர்ந்து கோழிப்பண்ணைகள் அமைப்பதற்குரிய ஊக்குவிப்பையும் ஒத்தாசையையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழங்க வேண்டும்.

**இறைவனை அபிஷேகிக்கும் பலன்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | தூயநீர் | – | சாந்தி |
| 02. | துளசிநீர் | – | விஷ்ணு அருள் |
| 03. | மலரிட்ட நீர் | – | மலநீக்கம் |
| 04. | வாசனைத் திரவியம் | – | நீழத்த ஆயுள் |
| 05. | சந்தனம் | – | செல்வம் |
| 06. | பால் | – | ஆயுள் விருத்தி |
| 07. | தயிர் | – | புத்திரபாக்கியம் |
| 08. | நெய் | – | மோட்சம் |
| 09. | தேன் | – | இசைஞானவிருத்தி |
| 10. | கருப்பஞ்சாறு | – | நித்திய சுகம் |
| 11. | சர்க்கரை | – | சத்துரு நாசம் |
| 12. | கற்கண்டு | – | சக்தி அருள் |

# மண்டைதீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி

மண்டைதீவு வரலாற்றில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு அண்மையில் தீர்வு கிடைத்துள்ளமை குறித்து இப்பகுதி மக்கள் குடிநீர் வழங்கல் திணைக்களத்துக்கு நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனத்தின் அனுசரணையுடன் அல்லைப் பிட்டி செட்டிகாட்டுப் பகுதியிலிருந்து மண்டைதீவுப் பகுதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இதன் ஆரம்பநாள் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து கொண்டு குழாய் மூலம் குடிநீர் வழங்கும் நிகழ்வை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர். மேற்படி நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்துள்ளனர்.

காலம் காலமாக இப்பகுதி மக்கள் வரட்சிக் காலங்களில் குடிநீர் இன்றி சொல்லொணாத் துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து வந்தனர். இங்கு யுத்த அனர்த்தங்களால் உவர்நீர் தடுப்பு அணைக்கட்டுக் கள் உடைக்கப்பட்டு குடிநீர்க் கிணறுகள் உவர்த்தன்மையடைந்துள்ளன. இதனால் குடிநீர் வழங்கும் சபை, வேலணை பிரதேசசபை, புங்குடுதீவு சர்வோதயம் போன்ற அமைப்புக்கள் பவுசர் மூலம் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்கி வந்தமை யாவரும் அறிந்ததே! அதோடு கால்நடைகள் குடிநீர்த் தட்டுப்பாட்டால் இறந்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அல்லைப்பிட்டி செட்டிக்காட்டுப் பகுதியில் இருந்து நீண்ட காலமாக 12 மைல் தொலைவிலுள்ள ஊர்காவற்றுறைக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க முடியுமானால் அல்லைப்பிட்டியில் இருந்து மூன்றரை மைல் தொலைவிலுள்ள மண்டைதீவுக்கு ஏன் குழாய் மூலம் குடிநீர் வழங்க முடியாது. என்பதை சுட்டிக்காட்ட, மண்டைதீவு மக்களுக்கு குழாய் மூலம் குடி நீர் வழங்கக் கோரி வீரகேசரி, யாழ்ஓசை ஆகிய பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்களைத் திறக்க வைத்துள்ளது என பிரதேசவாசி ஒருவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இது இவ்வாறு இருக்க மண்டைதீவு விவசாயிகள் கடந்த 20 வருடங்களுக்குப் பின்பு இம்முறை பெரும்போக நெற்செய்கையில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சேதமடைந்த உவர்நீர் தடுப்பு அணைக்கட்டுக்களால் நெற்செய்கைக்குரிய வயல் நிலங்களில் உவர் நீர் புகுந்து உவர்த் தன்மை அடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட முடியாது உள்ளது. தற்போது யுத்தம் முடிந்து சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள உவர்நீர் அணைக்கட்டுக்கள் துரித கதியில் மீண்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான உரம், பசளை, விதை நெல்லுகள், கிருமிநாசினிகள் போன்ற விவசாய உள்ளீடுகளை இப்பகுதி விவசாய சம்மேளனம் ஊடாக மானிய விலைக்கு வழங்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

## இந்துமத தத்துவங்களில் கும்பம்

1. குடம் – தசையுடம்பு
2. அதனுள்ளநீர் – குருதி
3. அதில் உள்ள இரத்தினம் – எலும்பு
4. குடத்தைச் சுற்றியுள்ள நூல் – நாடிகள்
5. பஞ்சவர்ண நூல் – பூநூல்
6. ஜெபிக்கப்படும் மந்திரம் சொர்ணம் – உயிர்பொற்காணிக்கை
7. தற்யைப் கூச்சம் – தலைமுடி
8. மாவிலை – ஐடை
9. தேங்காய் – தலை
10. வஸ்திரம் – தோல்

# திருநெல்வேலி பொதுச்சந்தைக் கழிவுகள் அகற்றப்படுமா?

யாழ். குடாநாட்டில் பிரசித்திபெற்ற பொதுச்சந்தைகளில் திரு நெல்வேலிப் பொதுச் சந்தையும் ஒன்றாகும். இப் பொதுச் சந்தை நல்லூர் பிரதேச சபைக்கு கீழ் இயங்கி வருகின்றது. இச் சந்தை ஆரம்ப காலத்தில் மிகச் சிறிய கட்டடத்தொகுதிகளைக் கொண்டது. கால கதியில் சந்தைக் கட்டடங்கள் அதிகரித்து சகல வளங்களையும் கொண்டதாக மாறியுள் ளது.

இச் சந்தைக்கு காலை வேளைகளில் பெரும் எண்ணிக்கையான வியாபாரிகளும் பொருட்களைக் கொள்வனவு செய்வோரும் ஒன்று கூடுவர். இதனால் கட்டடங்கள் விஸ்தரிக்கப்பட்டு மீன், பழ, மரக்கறிச் சந்தைகள் என பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் மக்கள் தங்கள் மரக்கறித் தேவைகளுக்கு மருதனார் மடம் பொதுச் சந்தைக்குச் சென்று வந்தனர். இன்று குடாநாட்டு மக்கள் அனைவரும் மரக்கறித் தேவைக்கு திருநெல்வேலி சந்தைக்கே சென்று வாங்குகின்றார்கள்.

குடாநாட்டுப் பொதுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலை கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. மரக்கறி வியாபாரிகள் காலை யில் சந்தையில் கூடும் போது என்ன என்ன மரக்கறி வகைகள் என்ன விலையில் விற்கவேண்டும் என்று தங்களுக்கு தாங்களே தீர்மானித்து எல்லோரும் ஒரே விலையில் மரக்கறி வகைகள் விற்று வருவதாக பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடத்திவரும் குடும்பங்கள் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதால் வாழ்க்கை நடத்த முடியாது திண்டாடுகின்றார்கள்.கூலிவேலை செய்யும் தொழிலாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாவோ அல்லது 600 ரூபாவோ சம்பளமாகப் பெற்று எப்படி குடும்பம் நடத்துவது? அதோடு திட்டமிட்டு செயற்படாத காரணத்தால் இவர்களில் சிலருக்கு குழந்தை அதிகம். இந்த நிலையில் எப்படி குடும்பத்தை நடத்துவது?

வியாபாரிகள் தங்களுக்குத் தாங்கள் விலை நிர்ணயம் செய்வதற்குத் தடை விதித்து பாமரமக்களின் நலன்கருதி மரக்கறிகளுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விலைகளை நிர்ணயிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மரக்கறி விலை அதிகரிப்பு குறித்து மௌனம் சாதிப்பதன் மர்மம் என்ன என்று பாவனையாளர்கள் கேட்கின்றார்கள். இதே வேளை, பெருந்தொகையான மரக்கறிகள் தென் இலங்கைக்கு தினசரி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் டம்புல என்ற இடத்திலிருந்து மரக்கறிவகைகள் இங்கு கொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

எதுவாயினும் மக்களுக்குச் சேவை செய்வதிலும் மக்கள் கஷ்டங்களை நீக்கி இயல்பு வாழ்க்கை வாழ வழிவகுத்து கொடுப்பது அரசின் கடமையாகும். விலைவாசியைக் கூட்டி ஏழை மக்கள் வயிற்றில் அடித்து ஓலமிடுவதாக பாவனையாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை திருநெல்வேலி பொதுச்சந்தையில் காணப்படும் கழிவுப்பொருட்களை உடனுக்குடன் அகற்றி உதவவேண்டும்என்று மக்கள் கோரிவருகின்றனர். தினசரி காலை வேளை சேகரிக்கும் கழிவுப் பொருட்களை ஒரு இடத்தில் சேகரித்து இரண்டு மூன்று மணித்தியாலங் களுக்குப் பின்பு டிரக்டர் வண்டிமூலம் சுகாதார ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.

இதற்கிடையில் அக் கழிவுப் பொருட்களை காகங்கள், நாய்கள் சிதற வைப்பதோடு அதிலிருந்து துர்நாற்றமும் வீசுவதாக தெரிவிக்கப் படுகின்றது. ஆகவே சுகாதார ஊழியர்கள் உடனுக்குடன் அப்புறப்படுத்து வதால் அத் துர்நாற்றத்தைத் தடுத்து நிறுத்தலாம் தானே? இது இவ்வாறிருக்க பாடசாலை வீதியை அடுத்து நாவலடி வீதிச் சந்தியில் அப்பகுதி வாழ்மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவுப்பொருட்களைக் கொண்டு வந்து போடுவதால் கட்டாக்காலி நாய்களும் பறவைகளும் சிந்தி சிதறுகின்றன.

எனவே உடனுக்குடன் இக் கழிவுப் பொருட்களை அகற்ற வழி செய்ய வேண்டும்.

# அபிவிருத்திக்காகக் காத்திருக்கும் கட்டைப்பிராய் கிராமம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் கட்டைப்பிராய் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமம் யாழ். - பருத்தித்துறை வீதியில் 3ஆம் கட்டைக்கு அருகில் உள்ளது.

இங்கு வசித்து வரும் அனைத்து மக்களும் ஒரு தாய் பிள்ளைகள் போல் காலங்காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இங்கு காலத்துக்குக் காலம் சைவசமயப் பெரியார்கள் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்துவருகின்றார்கள். இதனால் இங்கு சைவமும் தமிழும் தலைநிமிர்ந்து வாழ்கின்றது. இக் கிராமத்தின் மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருப்பது அருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயமாகும்.

இக்கிராமத்துக்கு இவ்வாலயம் அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

அன்னை முத்துமாரியின் அற்புதங்களை எழுதினால் எழுதிக் கொண்டே போகலாம். இப்பகுதி மக்களின் துன்பங்கள், துயரங்களை அகற்றி வேண்டுவோர்க்கு வேண்டுவதை அம்பாள் அள்ளி வழங்கி வருகின்றாள். அம்பாளின் அற்புதங்களைக் கேள்விப்பட்டு அயல் கிராம மக்களும் மேற்படி ஆலயத்துக்கு வந்து வழிபட்டு பொங்கல் பொங்கி தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிச் செல்வதையும் காண முடிகின்றது.

இதைவிட வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளும் தவறாது நடைபெற்று வருகின்றன. இதைவிட விசேட தினங்களில் விசேட பூஜை வழிபாடுகள், அன்னதானங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

நயினை அருள்மிகு நாகபூசணி ஆலய உற்சவ காலங்களில் மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவமும் இடம்பெறுவது வழக்கமாகும்.

15 தினங்கள் வருடாந்த உற்சவம் இடம்பெற்று நிறைவுபெறும். உற்சவ தினங்களில் அடியார்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மேற்படி வீதியில் உள்ள பிரதான வீதி தற்பொழுது பெய்துவரும் மழை காரணமாக இங்குள்ள குண்டு குழிகளில் மழை வெள்ளம் நிரம்பி சிறுசிறு குளங்கள் போல் காணப்படுகின்றன. இதனால் மேற்படி வீதியால் செல்லும் பாதசாரிகளும் வாகனங்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றன.

இவ் வீதியைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் நீண்ட நாட்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரி வருகின்றனர். இனியாவது கோப்பாய் பிரதேசசபை அதிகாரிகள் இவ்வீதியை புனரமைக்க முன்வருவார்களா?

இது இவ்வாறிருக்க பருத்தித்துறை வீதியில் குறுக்காகச் செல்லும் கலைமணி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் மின்சாரம் இன்மையால் பல வீதி விபத்துக்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் தனது தேநீர்க் கடையை பூட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இறந்துள்ள சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது மேற்குறிப்பிட்ட இடத்தில் வீதி விளக்குகளைப் பொருத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அதோடு, கலைமணி வீதிக்கு குறுக்காகச் செல்லும் ஞானவைரவர் ஆலய வீதியும் நீண்ட காலமாக புனரமைக்காமல் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பகுதியில் அடிக்கடி இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக் கப்படுகின்றது. இதனால் மக்கள் இரவு நேரங்களில் திருடர்களுக்கு அஞ்சி விடிய விடிய கண்விழித்து வருகின்றார்கள். இரவு நேரங்களில் கல்விகற்க முடியாது மாணவர்கள் கஷ்ரப்படுகின்றார்கள்.

**தீபம் ஏற்றுவதன் புகழ்**

1) நெய்விளக்கேற்றினால்
மெஞ்ஞானம் அறிவு மலரும்

2) எள்ளெண்ணை விளக்கு ஏற்றினால்
யமபயம் அகலும் துஷ்ட நீக்கம்

3) இலுப்பெண்ணை விளக்கேற்றினால்
ஐஸ்வரிய ஆரோக்கியம்

4) ஆமணக்கெண்ணை விளக்கேற்றினால்
சகல செல்வயோகம்

5) இலுப்பெண்ணை ஆமணக்கெண்ணை எள்ளெண்ணை மூன்றும்
கலந்து விளக்கு ஏற்றினால்
அஷ்ட ஐஸ்வரியங்களும் நலம் தருக.

# அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு கேள்விக்குறியாகும் அன்றாட வாழ்க்கை

யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை உட்பட அனைத்துப் பொருட்களின் விலைகளும் விஷம் போல் ஏறிக்கொண்டே போகின்றது. இதனால் மக்கள் தங்கள் அன்றாட சீவியத்தை நடத்த முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்கள் இந்த விலை ஏற்றத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இன்று ஏழை மக்களின் காலை, மாலை உணவாக பாண் பயன்பாட்டில் உள்ளது. பாணின் விலை 5ரூபாவால் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாணின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக வியாபாரி ஒருவர் விசனம் தெரிவித்துள்ளார்.

தினசரி பாடசாலை செல்லும் மாணவர்கள் , ஆசிரியர்கள், கூலித் தொழிலாளிகள் தங்கள் அன்றாட காலை உணவாக பாணைச் சாப்பிட்டு வருகின்றனர். இவர்கள் பாணின் விலை ஏற்றத்தால் கவலையையும் கண்டனத்தையும் வெளியிட்டு வருகின்றனர்.

எரிபொருள் விலையேற்றம், விறகின் விலை அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணங்களால் பல குடும்பப் பெண்கள் காலை மாலை உணவாக பாணையே உபயோகித்து வருகின்றார்கள்.

இதேவேளை தமிழ், சிங்கள புதுவருடக் கொண்டாட்டக் கடைகளும் களைகட்ட ஆரம்பித்து விட்டன. இதனால் யாழ். நகர வீதிகள்

ஜனசந்தடியுள்ளனவாக காணப்படுகின்றன. 100க்கு மேற்பட்ட அங்காடி வியாபாரிகள் தென்னிலங்கையிலிருந்து பொருட்களை யாழ். நகருக்கு எடுத்து விற்பனை செய்து வருகின்றார்கள்.

இது இவ்வாறிருக்க கடைகளுக்கு முன்பாக பார்வையாளர்களின் பார்வைக்கு பொருட்களின் விலைப்பட்டியல் வைக்கப்பட வேண்டும் என்று விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் பல தடவை தெரிவித்தும் இதை சில வர்த்தகர்கள் கடைப்பிடித்து வருவதும் இல்லை. இதனால் சில அத்தியாவசியப் பொருட்கள் உட்பட பல பொருட்களின் விலைகள் கடைக்குக் கடை வித்தியாசமாகக் காணப்படுவதாக பாவனையாளர் தரப்பில் குறை கூறப்படுகின்றது.

குடாநாட்டில் விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தங்கள் கடமையைச் சரியாகவும் நேர்மையாகவும் செய்ய முன்வர வேண்டும். சட்டத்தைக் கடைப்பிடிக்காத வர்த்தகர்களை சட்டத்தின் முன் நிறுத்த முன்வரவேண்டும். அதோடு சகல பொருட்களுக்கும் விலையினை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டும். இது இவ்வாறிருக்க சைவ ஆலயங்களில் விளக்கேற்றுவதற்கு தேங்காய் எண்ணெயை குறைவான விலைக்கு பெறுவதற்கு அதிகாரிகள் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

தற்போது எரிபொருட்கள் அதிகரித்ததனால் போக்குவரத்துக் கட்டணமும் பல மடங்கு கூடியுள்ளது. பஸ் கட்டணம், தனியார் வாகனங் களுக்கான கட்டணம் என்பனவும் அதிகரித்துள்ளன. அதேநேரங்களில் பல இடங்களில் பகல் முழுவதும் மின்சாரம் நீண்ட நாட்களாக துண்டிக் கப்பட்டு வருகின்றது. இதனால் நூற்றுக்கு மேற்பட்டோர் வேலை இழந்துள்ளனர். கராஜ்களில் வேலை பார்ப்பவர்கள், ஒட்டு வேலை செய்யமுடியாது தங்கள் வேலைகளை இழந்துள்ளனர். இதனால் அவர்களது குடும்பங்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளன.

நாட்கூலி தினசரி 1000வரை உயர்ந்துள்ளதாக முதியவர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் தொழில் செய்விப்போர் கூலி அதிகரிப்பால் செய்விக்கும் வேலையைக் குறைத்துள்ளனர். அத்தியாவசிய வேலைகள் மட்டும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு பொருட்களின் விலை உயர்வு, போக்குவரத்துக் கட்டணம் அதிகரிப்பு, மின்சாரத் தடங்கல் என பல அசௌகரியங்கள்

யாழ். குடாநாட்டிலுள்ள மக்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. குறிப்பாக கிராமப்புறங்கள், தீவுப்பகுதிகள் இதனால் பாதிக்கப்படுகின்றன.

நாளாந்த வருமானம் பெறும் கூலித் தொழிலாளிகள் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பெரிதும் பாதிப்ப டைந்து வருகின்றனர். நாளாந்தம் பஸ்களில் வேலைக்கும் பாடசாலைக் கும் செல்பவர்கள் பஸ் கட்டண உயர்வால் பாதிப்படைகின்றனர். மின்சாரத்தை நம்பித் தொழில் செய்துவரும் தொழிலாளர்கள் மின் தடையால் நாளாந்தம் வருமானத்தை இழந்து வருகின்றனர்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவும் கட்டண அதிகரிப்புக்களும் மக்களை மேலும் துன்ப சூழலுக்கே இழுத்துச் செல்கின் றன.

**விநாயகர் வணக்கம்**

1. யானைமுகம் பிரணவமாகின்றது
2. பேழைவயிறு – அண்டங்கள் யாவும் தன்னிடத்தில் நிறையவுள் ளது
3. முக்கண் – இச்சாசத்தி – கிரியாசத்தி
4. இருகரங்களில் உள்ள அங்குச பாசம் – மறைத்தல் தொழில் தானே செய்பவர்
5. மற்றைய இருகரங்களில் ஒற்றைக் கொம்பு அக்ஷமாலை புகலிடம் அருள்வார் தூயமனதுடன் வழிபட்டால் வரும் இடர்களை நீக்கி அருள்வார்.
6. அவல் கடலை பொரி
   பாவினையையறுத்த நல்வினைப் பயனருள்வார்
7. மாதுளை ஆலங்காய்
   மோதகம்
   உலகமனைத்தும் பரிபூரணப் பொருளாய் விளங்குபவர்
8. பாசம் ஒந்றைக்கொம்பு :–
   அங்குசம் துதிக்கை மோதகம்:–
   ஐந்தொழில்களையும் புரிந்து அருள்பவர்

# செம்மணி மயானம் சீர்திருத்தப்படுமா?

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட செம்மணி இந்து மயானம் பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் கவனிப்பாரற்ற நிலையிலிருந்து வருகின்றது. பரந்த பிரதேசத்தை உள்ளடக்கிய இம் மயானத்தைச் சீரமைப்பதற்கு பொதுமக்களின் பங்களிப்புக் கோரப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட பல கிராமத்து மக்களால் பயன்படுத்தப்படும் இம் மயானத்தின் எல்லைகள் வரையறுக்கப்படாது திறந்த வெளியாகவே காணப்படுகின்றது. இதற்கான எல்லைகளை வரையறுத்து அதனைச் சுற்றி மதில் கட்டுவதற்கான பணிகளை முன்னெடுக்கவேண்டியுள்ளது.

எனவே சுற்றுமதில் கட்டுவதற்குத் தேவையான நிதி பங்களிப்பை மயான அபிவிருத்திச் சங்கம் பொதுமக்களிடம் வேண்டி நிற்கின்றது.

நல்லூர் செம்மணி இந்து மயானம் இப்பகுதி மக்களால் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. நாட்டின் தற்போதுள்ள சூழ்நிலையில் தினசரி பல சடலங்கள் தினம் அடக்கம் செய்யப்படவேண்டிய தேவை ஏற்பட்டு வருகின்றது. இதனால் மேற்படி மயானத்தைப் புனரமைக்க சகல மக்களும் ஒத்துழைக்க வேண்டுகின்றோம் என மேற்படி மயான அபிவிருத்திச் சங்கத்தினர் துண்டுப் பிரசுரமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். அக் கோரிக்கையில் தெரிவித்துள்ளதாவது -

எமது சங்கம் ஏற்கனவே தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ஒரு தொகுதி மதில் மற்றும் இளைப்பாற்று மண்டபத்தின் திருத்த வேலைகளையும் மற்றும்

வெளிநாட்டிலுள்ள அன்பர் ஒருவரின் நிதி உதவியின் மூலம் தீர்த்தக் கேணி ஆகியவற்றைச் சீர்செய்து முடித்துள்ளது.

நடப்பாண்டில் முதற்கட்டமாக ஈறோவில் நிறுவனத்தின் அனு சரணையுடன் மயானத்தில் படர்ந்து வளர்ந்திருந்த பற்றைகளை வெட்டி கழிவுப் பொருட்களை ஒதுக்கி மயானத்தை அழகுபடுத்தி வருகின்றது.

காணிக்குள் மீண்டும் கழிவுகளைக் கொட்டாது இருப்பதன் பொருட்டு மயானத்தைச் சுற்றி மதில் நிர்மாணிக்கவுள்ளனர். இதற்குக் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபா தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள் ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தி வரும் மேற்படி மயானத்தை இப்பகுதி மக்களாகிய உங்களின் உதவியுடன் இந்த ஆண்டில் இரண்டாம் கட்ட வேலைகளைச் செய்து முடிக்க நாம் தீர்மானித்துள் ளோம்.

இதன் நிமிர்த்தம் எமது சங்க நிர்வாகத்தினர் தற்போது நிதி சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். கொடை வள்ளல்களும் வசதி படைத்தவர்களும் தாராளமாக நிதி உதவியும் ஏனையோர் குறைந்தது ஆயிரம் ரூபா பணத்தை வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். எமது மூன்றாம் கட்டமாக நிழல் தரும் மரங்களை மயான வளாகத்துக்குள் நாட்டுவதற்கு எண்ணியுள்ளனர். இது ஒருபுறமிருக்க மின்சாரத்தில் உடல்களைத் தகனம் செய்யும் உலை (பேணர்) ஒன்றை அமைப்பதுதான் சங்கத்தின் நீண்டகால திட்டமாகும். இதற்கு முதற் கட்டமாக முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் கணேஷ் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தில் கிட்டத்தட்ட 300 மீற்றர் தூரத்திற்கு மின் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இது எமது மக்களின் எதிர்கால தேவை கருதிய ஒரு திட்டமாகும். அத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளனர். இது எமது சங்கத்தின் நீண்ட நாள் குறிக்கோளாகும்.

விரைவில் இதைச் செய்து முடிக்கவேண்டுமென்பது இச் சங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இப்பகுதி மக்களாகிய நீங்கள் எமது நோக்கத்தைக் கருத்திற் கொண்டு உங்கள் மயான 2ஆம் கட்ட வேலைகள் பூர்த்தியடைய மனமுவந்து வாரி வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின் றனர் சங்கத்தினர்.

# திருநெல்வேலிச் சந்தையில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள்

குடாநாட்டிலுள்ள பொதுச்சந்தைகளில் திருநெல்வேலிப் பொதுச் சந்தையும் ஒன்றாகும். இப் பொதுச்சந்தை துரித வளர்ச்சி கண்டுள்ள போதும் இடப்பற்றாக்குறை இன்னும் நிலவி வருகின்றதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

மேற்படி சந்தைக்குப் பல ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பல நூற்றுக்கு மேற்பட்ட சிறு வியாபாரிகளும் தினமும் வந்து மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

இச் சந்தை பிரபல்யமாக விளங்குவதற்கு முன்பு குடாநாட்டு மக்கள் தங்கள் வீட்டு விசேட தினங்களுக்கு பெரும் தொகையான மரக்கறி வகைகளை சுன்னாகம், மருதனார் மடம் போன்ற சந்தைகளுக்குச் சென்று குறைவான விலையில் கொள்வனவு செய்து வந்தார்கள்.

ஆனால் இன்று குடாநாட்டில் மரக்கறித்தேவைக்கு திருநெல் வேலிச் சந்தையே பெயர் போன இடமாக மாறிவிட்டது. சிறிது முன்பு மரக்கறிவகைகள் தம்புள்ளை மற்றும் மலைநாட்டுப் பகுதிகளிலிருந்து எடுத்து வந்து விற்று வந்தனர். ஆனால் இன்று அதைக் காணமுடிவ தில்லை.

முழுக்க முழுக்க உள்ளூர் விவசாயிகளின் மரக்கறி வகைகள் விற்கப்பட்டு வருகின்றன. இது வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம். தினசரி பொதுமக்களும் விவசாயிகளும் பெருகி வருகின்றார்கள். இதனால்

பொது மக்கள் காலை நேரங்களில் சன நெரிசல்களுக்கு மத்தியில் தங்களது தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். இந்த நிலையில் இங்குள்ள கடைகளும் வியாபாரிகளும் வாடிக்கையாளரின் நலன் கருதி இச் சந்தையில் தினசரி மரக்கறி வகைகளின் விலைகளைப் பெரிய எழுத்தில் பொதுச் சந்தை மத்தியில் அனைவரதும் பார்வைக்கும் தெரியும்படி வைக்க வேண்டும். சகல பொருட்களுக்கும் விலைகள் நிர்ணயம் செய்து குறிப்பிட்டிருக்க வேண்டும். அத்துடன் பொதுமக்கள் பாவனைக்கு சிறிய அளவிலான தராசுகளும் வைத்திருக்க வேண்டும்.

இது இவ்வாறிருக்க வழக்கத்தில் அடித்தளத்திலுள்ள மரக்கறி வியாபாரிகளை அண்மையில் சந்தையில் சந்தைக்கு மேல் தளத்துக்கு நிர்வாகம் மாற்றியுள்ளதால் வியாபாரிகளும் பொருட்கள் கொள்முதல் செய்ய வருபவர்களும் பல விதமான கஷ்டங்களை அனுபவித்து வருவதாக வியாபாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

பெருந்தொகையான கொள்முதல் செய்யும் வியாபாரிகள் கீழ் இருந்து மேல் தட்டுக்கு ஏற்றி இறக்கும் கூலியாக பணம் கொடுக்க வேண்டிய நிலை இருப்பதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். ஆகவே மேல் மாடி மாற்றத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறுபரிசீலனை செய்தும் மீண்டும் கீழ்த்தளத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனை உரியவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சந்தை உள்ளடங்கிய ஆடியபாத வீதி ஓரங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் மேற்படி வீதியால் காலை நேரங்களில் பொதுமக்கள் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இப்பகுதியில் இருந்தும் இந்த நிலை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது. அதிகாரிகள் இந்த விடயத்தில் முக்கியமாக கவனம் எடுக்க வேண்டும். பொது மீன் சந்தை விற்பனைப் பகுதியில் கடல் உணவுகளின் விலை யானை குதிரை விலை என விற்கப்பட்டு வருவதாக பாவனையாளர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீன்களின் விலைகளை நிர்ணயம் செய்து சகல மக்களும் வாங்கிப் பயன் பெறச் செய்யவும் இதன் விலை உயர்வினால் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் ஏழை வறுமை மக்கள் மீனுக்கு அதிக விலை கொடுத்து வாங்கிச் சாப்பிட முடியாத நிலையில் திண்டாடுகின்றனர்.

சில நேரங்களில் ஐஸ்போட்ட கடல் உணவுகள் கிடைப்பதாகவும் இவ் வெய்யில் காலத்தில் இலகுவில் பழுதடைவதாகவும் பாவனையாளர் களும் வியாபாரிகளும் தெரிவிக்கின்றனர்.

# திருநெல்வேலி இந்து மயானம் புனரமைக்கப்படுமா?

திருநெல்வேலிப் பகுதி சைவ மக்களுக்கான மயானம் நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாமல் இருந்துவருவதாக பிரதேசவாசி ஒருவர் கவலை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில், இப்பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஓவசியரும் சைவப் பெரியார் ஒருவரின் கடின முயற்சியால் மின்சாரத்தால் சடலங்களை எரிக்கும் நோக்கோடு ஒரு கட்டம் அவரது மறைவுக்குப் பின்பு நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் தற்போது தேடுவாரற்று இருக்கின்றது.

மயானத்தின் வளவினுள் பாரிய மரமொன்று நீண்ட காலமாக விழுந்து காணப்படுவதோடு முட்பற்றைகள் ஆங்காங்கு காணப்பட்டு மயானத்துக்குச் சடலங்களைக் கொண்டுவந்து அடக்கம் செய்பவர்களுக்கு கஷ்டத்தையும் அசௌகரியத்தையும் கொடுத்து வருகின்றன.

சடலங்களை நல்லடக்கம் செய்ய வருபவர்கள் மாலை நேரங்களில் மின்னொளியின்றி கஷ்ரப்படுகின்றார்கள். மக்களுக்கு வசதியாக குழாய் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். இங்கு சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கு நல்லூர் பிரதேச சபையால் ஒரு தொகைப் பணம் அறவிடப்பட்டு வருகின்றது. இங்கு ஒரு நிரந்தரத் தொழிலாளி ஒருவரை மாத வேதனத்தில் நியமனம் செய்யவேண்டும். இரவு நேரத்தில் இல்லாவிட்டாலும் பகல் வேளைகளிலாயினும் தொழிலாளி ஒருவர் முழு நேரமும் கடமையாற்ற வேண்டும். சடலங்களை எரிப்பவர்கள், அடக்கம் செய்பவர்கள் மதிய வேளைகளில் இளைப்பாற

ஒரு தரிப்பிட மடமும் நிர்மாணிக்கப்பட வேண்டும். மடம் இல்லாது கொழுத்தும் வெய்யில் காலங்களிலும் மழைக்காலங்களிலும் மயானத் துக்கு வருபவர்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகிறார் கள்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் வரவு - செலவு திட்ட நிதியில் கூடிய பணம் ஒதுக்கி மேற்படி மயான நிர்மாணத்துக்கு சம்பந்தப்பட்ட பிரதேச சபை அதிகாரிகள் முன்வர வேண்டும். இம் மயானம் நீண்ட காலமாக எதுவித அபிவிருத்திப் பணிகளும் இன்றி இருந்து வருவது குறித்து இப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றார்கள். மேலும் மலசலகூட வசதிகள் இன்றி, மக்கள் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மயானத்தைப் புனரமைக்காத காரணத்தால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வருவதாக மக்கள் குறை கூறுகின்றனர்.

பிரதேச சபைகளுக்கு அபிவிருத்திப் பணிகளுக்கு பெருந் தொகைப் பணம் ஒதுக்கப்படுகின்ற போதும் அந்த நிதி உரிய தேவை களுக்கு ஒதுக்கப்படாது இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இவ்வாறு நிதிகளை மக்களின் தேவைகளுக்கு உரியவகையில் பயன்படுத்துவதற்கு முறையான திட்டங்களை துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடி திட்டமிட வேண்டும். வருங்காலத்திலாவது மக்களுக்கு தேவையான முக்கியமான வேலைத்திட்டங்களில் கவனம் எடுத்து அவற்றை நிறைவுசெய்யும் வகையில் அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

# கல்வி உலகில் பெண்களை மேம்படுத்தும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

யாழ். மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டு வரும் பெண்கள் பாடசாலைகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்கது. இக் கல்லூரி 1943 ஆம் ஆண்டு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்ப அதிபராக யாழ். இந்துக் கல்லூரி அதிபரான யூ. குமாரசுவாமியே இக் கல்லூரிக்கும் அதிபராக விளங்கினார்.

இக் கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க கல்லூரி மைதானத்திற்கு அருகில் உள்ள பெரியார் சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் பொன்னாலயம் என்ற வீட்டில் இயங்க ஆரம்பித்தது. அன்றிலிருந்து காயத்திரி கணேசன் அதிபராக நியமிக்கப் பட்டார்.

மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க 1945 ஆம் ஆண்டு தார்மீக வள்ளலான விசாலாட்சி சிவகுருநாதர் தம்பதிகளால் வழங்கப்பட்ட 40 பரப்புக் காணியில் தற்போதைய இடத்துக்கு பாடசாலை இடம்மாறியது. அன்று கல்லூரி முகாமையாளரான சேர். வைத்தியலிங்கம் துரைசாமி அவர்களால் கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு அடிக்கல் நாட்டப் பட்டு கல்லூரி திறப்புவிழா நடைபெற்றது. மேலும், இந்துக் கல்லூரி சபையினால் காணிக் கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரி வளாகம் 114 பரப்பாக விஸ்தரிக்கப்பட்டது. 1943 ஆம் ஆண்டு 8 ஆசிரியர்களுடன் 4ஆம் வகுப்பில் இருந்து 8ஆம் வகுப்பு வரையான 110 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தற்போது 85 ஆசிரியர்களையும் 2063

மாணவர்களையும் கொண்டிருப்பதுடன் தரம் - 6 தொடக்கம் தரம் - 13 வரையிலான இருமொழி மூல வகுப்புக்களைக் கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.

அதிபரான யூ. குமாரசாமி அவர்களைத் தொடர்ந்து வந்த அதிபர்களான திருமதி காயத்திரி கணேசன், செல்வி. முத்து அச்சையா, திருமதி கிளாராமொட்வாணி, திருமதி சரோஜினி, செல்வி. விமலா ஆறுமுகம், செல்வி. பத்மாவதி இராமநாதன், திருமதி திவ்வியசிரோன் மணி நாகராஜா, திருமதி சரஸ்வதி ஜெயராசா ஆகிய அதிபர்கள் கல்லூரியை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

2006 ஜனவரி மாதம் கல்லூரியைப் பொறுப்பேற்ற தற்போதைய அதிபர் திருமதி. வேதநாயகி பேரின்பநாதன் கடந்த 5 வருடங்களிலும் கல்லூரியின் அபிவிருத்தியில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின் றார்.

கடந்த 2010ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர வகுப்பில் 95 வீதமான மாணவர்கள் உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்பில் 63 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்றனர்.

இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். குறிப்பாக உள்ளக விளையாட் டுக்களிலும் மைதான பெரு விளையாட்டுக்களிலும் சாதனைகள் படைப்ப தில் முன்னேறிச் சென்றுகொண்டு இருக்கின்றார்கள்.

**கல்லூரியின் சாதனைகள் :**

பின்வரும் அணிகள் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் படைத்துள்ளன.

சதுரங்கம் : (19 வயது அணி), கரம் : (15 வயது அணி), கரம் : (19 வயது அணி), மேசைப்பந்து : (15 வயது அணி), மேசைப்பந்து(19 வயது அணி), பூப்பந்து : (19 வயது அணி), 15 வயதுப் பிரிவில் 100 M ஓட்டத்திலும், முப்பாய்ச்சலிலும் 19 வயதுப் பிரிவில் 100 M தடை தாண்டல், உயரம் பாய்தல் என்பவற்றிலும் தேசிய மட்டப் போட்டிகளில்

பங்குபற்றி மறையே செல்வி. ச. பானுஜா, செல்வி. உ. சோபினி ஆகியோர் கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்த்தினப் போட்டி - 2010இல் செல்வி. தி. வருணியா தனி இசை பிரிவு -3 இல் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடத்தினையும் குழு இசை பிரிவு -2 இல் கல்லூரி மாணவிகள் பங்குபற்றி தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தினையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மாகாண மட்டங்களில் நடாத்தப்பட்ட சர்வதேச அஞ்சல் தினம், சர்வதேச ஒலிம்பிக் விழா, அகில இலங்கை சிறுவர் சித்திரப்போட்டி, போதைப்பொருள் தடுப்பு ஆக்கத்திறன் போட்டி, புற்றுநோய் கருத்தோவியப் போட்டி போன்ற போட்டிகளில் பங்குபற்றி கல்லூரி மாணவிகள் பெறுமதி மிக்க சான்றிதழ்களையும், பணப்பரிசில்களையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லூரியின் மகுட வாசகமான என்பதற்கிணங்க தனது தூர நோக்கான கல்வி, படைப்பாற்றல், உடல்- உள, ஆன்மீக, மேம்பாட்டினூடாக எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மகளிரை உருவாக்கும் ஒரு உன்னத இடமாக கல்லூரி மிளிர்வதற்கான பணிக்கூற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.

வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவிகளினதும் கொழும்பு பழைய மாணவிகளினதும் பெற்றோர்களினதும் கல்வித் திணைக்களத்தினதும் அனுசரனையுடன் பௌதீக வளங்களை ஓரளவு பெற்றுவருகின்றது. கல்லூரி பழைய வகுப்பறைக் கட்டிடங்களைக் கொண்டிருந்த போதும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் கணினியூடான வகுப்பறைக் கற்றலை மேற்கொள்வதற்கான திட்டமிடலின் ஆரம்பச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. எல்லா வகுப்பறைகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் முழுமைபெறத் தொடர்ந்தும் முயற்சித்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மேற்படி கல்லூரி இன்று சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்று மாகாண மட்டம், தேசிய மட்டம் நடத்தும் போட்டிகளில் அதிக பெறுபேறுகளை வருடா வருடம் பெற்று தலை நிமிர்ந்து நிற்கின்றது. அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியன இக் கல்லூரி வளர்ச்சிக்கு பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கி

வருவது பாராட்டத்தக்கது.

வருடா வருடம் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இடப் பற்றாக்குறை தளபாடத் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் இக் கல்லூரி இருந்து வருகின்றது.

கல்லூரி அதிபர் திருமதி வெ. பேரின்பநாதனின் ஆளுமை மிக்க நிர்வாகத் திறமையும் மற்றும் பிரதி அதிபர், கல்லூரி ஆசிரியர்கள், கல்வி சார் ஊழியர்கள் ஆகியோர்கள் கல்லூரி வளர்ச்சிக்காக உழைத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு: தற்போது இவர் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுள்ளார்.**

**தூப தீப சாந்தி**

1) தூபம் கிரியாசத்தியின் சொரூபம் ஆணவமல நீக்கம்
2) தீபம் மங்கள அருள் பாலிக்கும் (பாவநாசம்)
3) விபூதி அணிவதால்
சிவனருள் பாலிப்பார் நோய் நீங்கும்
4) தீர்த்தம் அருந்துவதால்
ஸ்ரீ ஆன்மா பரிசுத்தமாகின்றது (பிணிதீரும்)
5) சந்தணம் நெற்றியில் அணிவதால்
குளிர்ச்சி பொருந்திய பார்வை அளிக்கின்றது. கண்நோய் நீங்கும்
6) குங்குமம் நெற்றியில் அணிவதால்
இலட்சுமி தாங்கல்யம் நிலையான வாழ்வு மலரும்
7) இறைவன் புகழ் பாடுவதால்
சர்வதோஷம் விலகி வாழ்வு மலரும் சரஸ்வதி கடாச்சம் கிட்டும்
8) சிவசக்தி தோத்திரம் பண்ணுவதால்
அவமிருந்து காலமிருந்து பயம் தோஷம் விலகும்
9) இறைபக்தி மெய்யன்போடு விரதம் பூண்டு வேதம் ஓதுவதால்
பிரமசத்தி தோஷம் விலகி சுபீட்சமான வாழ்வு மலரும்
10) தினமும் சூரிய நமஸ்காரம் செய்வதால்
இல்லறம் நல்லறமாகும்
11) துளசி பூசை செய்து துளசி நீர் அருந்துவதால்
விஷவாதம் பித்த நோய் நீங்கி ஷர்வ சத்தியருள் மலரும்
12) பகவதீஸ்வரனை ருத்திராட்ச மணி கொண்டு ஜெபம் செய்வதால் பிரேமை நீங்கி மனச்சாந்தியும் சுகவாழ்வும் ஆத்ம திருப்தியும் ஏற்படும் வாழ்வு மலரும்.

# தண்ணீர் பிரச்சினையால் பரிதவிக்கும் மண்டைதீவு மக்கள் கானல்நீரான எதிர்பார்ப்புகள்

சப்த தீவுகளில் தலைத்தீவாக விளங்கி வரும் மண்டைதீவு யுத்தம் முடிவுற்று சமாதானம் மலர்ந்து நீண்ட காலமாகியும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீராத நிலையில் இருந்து வருகின்றது. ஆகவே, இனியும் தாமதியாது மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து மீளக் குடியேறாத மக்களை அவர்களின் சொந்த இடமான மண்டைதீவுக்கு மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யுத்த அனர்த்தங்களால் உடைந்து போன உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டுக்கள் மீண்டும் புனரமைக்கப்பட்டு கடந்த முறை பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டனர். இருப்பினும், எதிர்பாராத விதமாக பலத்த நட்டமடைந்துள்ளனர். நெல் விளையும் காணிகளில் உவர் நீர் உட்புகுந்து உவர் மணற்றரையாகியதே அதற்குக் காரணமாகும்.

விளைநிலங்களில் அடி உரம் போட்டு இரண்டு மூன்று முறை விளைநிலத்தை உழுத பின்புதான் எதிர்காலத்தில் கூடுதல் நெல் விளைச்சல் ஏற்படும் என பாதிக்கப்பட்ட விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்க முன்வரவேண்டும். முழுக்க முழுக்க விவசாயத்தினை நம்பி வாழ்க்கை நடத்திவரும் மக்கள் இதனால் நஷ்டம் ஏற்பட்டு நெற்செய்கையில் ஆர்வம் குன்றி இருக்கின்றனர். இங்கு மீனவர்களும் விவசாயிகளும் சுயதொழிலைச் செய்து காலங்காலமாக மிகவும்

ஒற்றுமையா வாழ்ந்து வருகின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் ஆழ்கடலுக்குச் சென்று, பாரிய கடலுணவுகளைப் பிடித்து திருப்தி கரமான முறையில் தங்கள் தொழிலைச் செய்து பெருந் தொகைப் பணத்தை சம்பாதித்து வருகின்றனர்.

இதேவேளை, வருடாவருடம் புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டாது அதற்குப் பதிலாக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ். குடாநாட்டில் பெருந்தொகையானவர் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வரும்போது வெங்காயத்தின் விலை குறையவில்லை. இதேவேளை, யாழ். குடாநாட்டில் அராலி போன்ற இடங்களில் பெரிய வெங்காயச் செய்கையைச் செய்கையில் நல்ல பலன் கிடைப்பதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 80 ரூபா வரை விற்கப்படுகின்றது.

மண்டைதீவில் பெரும் பிரச்சினையாக இருப்பது குடிநீர்ப் பிரச்சினையாகும். தற்போது காணப்படும் வெப்ப அதிகரிப்பினால் இங்குள்ள நீர் நிலைகள் வற்றியுள்ளன. மக்கள் தமது அன்றாடத் தேவைக்கு நீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமப்படுகின்றனர். வேறு இடங்களில் இருந்து இங்குள்ள தொட்டிகளுக்கு அடிக்கப்படும் தண்ணீரைக் கூட, பொதுமக்கள் முழுமையாகப் பெற்றுக் கொள்வதில் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு சிலர் அளவுக்கதிகமாக தண்ணீரை எடுத்துச் செல்வதால் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. தற்போது நிலவும் வறட்சி நிலையால் தண்ணீர்த் தட்டுப்பாடு தீவுப் பகுதிகளுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் பல தேர்தல்கள் வந்து போயுள்ளன. அவற்றில் எல்லாம் இப்பகுதி மக்கள் அத்தியாவசிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என வேண்டியே ஒற்றுமையாக வாக்களித்தார்கள். ஆனால், இன்று வரைக்கும் அவர்களால் முன்வைத்த எந்தப் பிரச்சினையும் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மையாகும் என பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

# மண்டைதீவில் பொதுச்சந்தை அமைப்பது எப்போது?

மண்டைதீவுப் பகுதியில் பொதுச்சந்தை ஒன்று நிர்மாணித்து வருமாறு இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக வேலணை பிரதேசசபையின் மண்டைதீவு உப அலுவலக நிர்வாகிகளைக் கோரிவருகின்ற போதும் இந்த விடயத்தில் சபை அதிகாரிகள் அக்கறை காட்டாது காலத்தைக் கழித்து வருகின்றார்கள்.

மக்கள் தங்கள் அன்றாட வீட்டுக்குத் தேவையான பொருட்களை திருப்திகரமான முறையில் கொள்வனவு செய்வதற்கு யாழ். நகருக்குச் செல்லவேண்டியுள்ளதாக பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார்.

இப் பகுதியில் மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளதால் மக்கள் அதிக விலை கொடுத்து தங்கள் வீட்டுக்குத் தேவையான மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

ஆகவே, இனியாவது சம்பந்தப்பட்ட பிரதேசசபை அதிகாரிகள் மண்டைதீவில் ஒரு பொதுச்சந்தையை நிர்மாணித்துக் கொடுக்க வேண்டும். இதேவேளை இங்கு பிடிக்கப்படும் தரமான மீன் வகைகளை வெளியூர் சந்தைகளுக்கு எடுத்துச்செல்வதால் இங்குள்ள மக்களுக்கு தரமான மீன்வகைகள் கிடைப்பதில்லை என பாவனையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்கு மீன் சந்தை இல்லாததால் மீனவர்களின் வீடுகளுக்குச் சென்று தங்களுக்குத் தேவையான மீன் வகைகளைக் கொள்முதல் செய்ய

வேண்டியுள்ளது. அதுவும் தரமான மீன்கள் கிடைப்பதில்லை. ஆகவே இப்பகுதியில் மீன் சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் நீண்டநாட்களாக கோரிவருகின்றனர்.

இது இவ்வாறிருக்க மண்டைதீவில் இயங்கி வந்த இரு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தற்பொழுது மண்டைதீவு தெற்கு பல.நோ. கூ. சங்கம் மட்டும் இயங்கி வருகின்றது.

ஆகவே, மண்டைதீவில் பொதுச் சந்தை ஒன்றை நிர்மாணித்து உதவினால் அருகில் உள்ள அல்லைப்பிட்டிக் கிராம மக்களும் பயன் அடைவார்கள். தற்போது இரு கிராமங்களைப் பிரிக்கும் கடல் வீதி பொது மக்களின் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் மேற்படி வீதியால் மக்கள் தினசரி போக்குவரத்தில் ஈடுபடுவதைக் காணமுடிகின்றது.

மக்கள் தமது அன்றாட தேவைக்குரிய சகல பொருட்களையும் தங்கள் சொந்த இடங்களான மண்டைதீவு, அல்லைப்பிட்டியில் கிடைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ முன்வர வேண்டும்.

இது இவ்வாறிருக்க நீண்ட நாட்களாக புனரமைக்கப்படாத மண்டைதீவு கடல்வீதி புனரமைக்க வீதி அபிவிருத்தி சபை முன்வர வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். வீதி புனரமைக்கப்படுமா?

# மண்டைதீவு தில்லேஷ்வரன் ஆலயம் புனரமைக்கப்படுமா?

*யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதமடைந்த நிலையில் நீண்ட நாட்களாக செயலிழந்து காணப்படும் மண்டைதீவு தில்லேஷ்வரத்தைப் புனரமைத்து மீண்டும் இயங்க வைக்க இப் பகுதி மக்கள் முன்வந்துள்ளனர்.*

*இதற்கான புனரமைப்புக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்று திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் அதிபர் தலைமையில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.*

*சுவாமி அம்மா மேற்படி ஆலயத்தைத் தனது சொந்தப் பணத்திலும் நிர்மாணித்து பூஜை வழிபாடுகளை நடத்தி வந்தார். இவரது மறைவுக்குப் பின்பு இவ் ஆலயம் செயலிழந்து காணப்பட்டது. 1990 ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது செல் வீச்சுக்களாலும் குண்டு வீச்சினாலும் இவ் ஆலயம் பலத்த சேதத்துக்குள்ளானது. மேற்படி ஆலயத்திலுள்ள பொருட்கள் நாளாந்தம் இனம் தெரியாத திருடர்களால் திருடிச் செல்வதாக பிரதேசவாசி ஒருவர் கவலை தெரிவித்தார்.*

*மேற்படி கூட்டத்தில் மண்டைதீவுப் பகுதியில் உள்ள முற்போக்குச் சிந்தனையும் இறைபக்தியும் நிரம்பிய மக்களில் சிலர் பங்குபற்றியிருந்தனர். இக் கூட்டத்தில் வெகு விரைவில் ஆலயத்தைப் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வதற்காக தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இத்துடன் புனரமைப்புப் பணிக்கு சமயப் பொது நிறுவனங்க*

ளிடமும் பொது மக்களிடமும் நிதி சேகரிப்பதென முடிவுஎடுக்கப்பட்டது. இதேவேளை நீண்ட காலமாக ஆலயம் செயலிழந்து காணப்பட்டதால் ஆலய சுற்றாடல் புற்கள், மரங்கள் வளர்ந்து சிறு காடு போல் காணப்பட்டது.

மேற்படி ஆலயத்துக்கு மிக அண்மையில் பாதுகாப்பு காரணங்களால் மூடப்பட்ட மண்டைதீவு கடற்கரை வீதி தற்போது பாதுகாப்புப் படையினரால் மக்கள் போக்குவரத்துக்கு திறந்து விட்டதைத் தொடர்ந்து தினசரி மக்கள் மேற்படி வீதியால் பெருந்தொகையாக சென்றுவருகின்றார்கள்.

இவ் ஆலயத்துக்கு அருகிலுள்ள அரச தரிசு நிலங்களில் வீடற்ற ஏழை மக்களுக்கு வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைத்து வழங்கி வந்தால் இப்பிரதேசம் சனசந்தடியுள்ள பிரதேசமாக மாறிவிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டது.

இக் கூட்ட இறுதியில் ஆலய புனரமைப்புக் குழுவின் தலைவியாக ஆலய பின் உரித்தாளர்களில் ஒருவரான திருமதி சரஸ்வதிதேவி செல்வராஜா ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். செயலாளராக மண்டைதீவு கிராம அலுவலகர் சசிகாந்தனும் பொருளாளராக சி. உமாபாலும் போஷகர்களாக மண்டைதீவு முன்னாள் பிரஜைகள் குழு செயலாளரும் பத்திரிகையாளருமான இராமச்சந்திராவும், பத்திரிகையாளரும் யாழ். திருநெல்வேலி இந்து கலவன் பாடசாலை அதிபருமான ந.விஜயசுந்தரமும் தெரிவுசெய்யப்பட்டனர். மற்றும் 7 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. ஆலய பூஜைகளை சைவம் ஒருவரைக் கொண்டு மேற்கொள்வது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

# கல்வியங்காடு மாலை நேர மீன் சந்தை மீண்டும் எப்போது ஆரம்பமாகும்?

யாழ். குடாநாட்டிலுள்ள பிரசித்திபெற்ற மீன் சந்தைகளில் கல்வியங்காடு பொது மீன் சந்தையும் ஒன்றாகும். மேற்படி சந்தைக்கு தினசரி பெரும் எண்ணிக்கையான மக்கள் தங்கள் வீட்டுக்குத் தேவையான கடலுணவுகளைக் கொள்முதல் செய்து செல்கின்றார்கள்.

இதனால், கடல் உணவு விற்பனையாளர்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால், தற்போதைய பொது மீன் சந்தைகளில் இடப்பற்றாக்குறை நிலவி வருகின்றது. பொதுமக்கள் இடப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் சன நெருக்கடிக்கு மத்தியிலும் கடலுணவுகளைக் கொள்முதல் செய்வதைக் காண முடிகின்றது.

அண்மையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீன் சந்தையை விஸ்தரிப்பு செய்தும் வியாபாரிகளின் அதிகரிப்பால் இடப்பற்றாக்குறை நிலவுகின்றது. ஆகவே, மீன் சந்தைக்கென தனியான கட்டடம் ஒன்றை ஒதுக்கி சகல வளங்களையும் கொண்ட கட்டடம் ஒன்றை பொதுச் சந்தை வளாகத்துக்குள் நிர்மாணிக்க வேண்டும்.

தற்போது மரக்கறி வகைகளின் விலை அதிகரிப்பால் தான் அசைவவாசியாகி மாறிவிட்டதாக மீன் சந்தைப் பாவனையாளர் ஒருவர் தெரிவித்தார். தற்போது தம்புள்ள என்னும் இடத்தில் இருந்து தினசரி மரக்கறி வகைகள் உள்ளூர் சந்தைக்கு வந்து குவிவதாகவும் யாழ். குடா நாட்டிலிருந்து லொறிகள் மூலம் ஏற்றுமதி செய்யப்படும் மரக்கறி

வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி சந்தைப் பகுதியில் சில நாட்களுக்கு குறைந்த விலையில் கடல் உணவுகள் கிடைப்பதாகவும் சில நாட்கள் கூடிய விலைகளில் விற்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கடல் உணவு வகைகளின் விலைகளை நிர்ணயித்து எப்பொழுதும் ஒரே விலையில் கிடைக்க வழிசெய்ய வேண்டும்.

இந்த பொது மீன் சந்தைக்கு பாஷையூர், நாவாந்துறை, வடமராட்சி ஆகிய பகுதிகளில் இருந்து பெருந்தொகையான கடலுணவு கள் விற்பனைக்கு வந்து குவிவதைக் காணமுடிகிறது.

மரக்கறி உணவிலும் பார்க்க கடலுணவு வகைகளில் அதிக போஷாக்கிருப்பதோடு நோய்களை எதிர்க்கும் ஆற்றலும் அதிகம் இருப்ப தாக சிலர் தெரிவிக்கின்றனர்.

வெள்ளிக்கிழமைகளில் மேற்படி மீன் சந்தைக்குச் செல்வதை இயன்ற அளவு சைவ மக்கள் தவிர்த்து வருகின்றனர். மேற்படி சந்தை அந்த நாட்களில் வெறிச்சோடிக் காணப்படுவதாக கூறுகின்றார்கள்.

இது இவ்வாறிருக்க, மேற்படி மீன் பொதுச் சந்தை சில வருடங்க ளுக்கு முன்பு மாலை வேளைகளிலும் கடல் உணவுகள் விற்பனையாகி வந்தது.

பெருந்தொகையான மீன் வியாபாரிகள் வடமராட்சிப் பகுதியி லும் பாஷையூர் பகுதியிலும் இருந்து கொண்டுவந்து கடலுணவு வகை களை குறைவான விலையில் விற்று வந்த காலம் ஒன்று முன்னர் இருந்தது. அந்தக் காலம் குடாநாட்டில் ஏற்பட்ட தற்போதைய சுமுகமான சூழ்நிலை யால் மீண்டும் விரைவாக வரவேண்டும் என்று மீன் பாவனையாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். முன்பு மாலை வேளைகளில் மீன்களை கொள் முதல் செய்வதும் மறுநாள் சமைத்து உண்பதும் வழக்கமாக இருந்தது. மாலையில் விற்கப்படும் கடலுணவுகள் அன்று மக்களுக்கு மலிவாகக் கிடைத்தனவாம்.

இச் சந்தைகளில் கருவாடு விற்பனையைக் காண முடிவதில்லை. முன்பு நெத்தலி, பாலை மீன் கருவாடு, கணவாய்க் கருவாடு போன்ற தரமான கருவாடுகள் விற்பனைக்கு வருவதுண்டு.

மீன் விலை அதிகரிக்கும் வேளைகளிலும் தட்டுப்பாடு நிலவும் வேளைகளிலும் மக்கள் அக்காலத்தில் கருவாட்டைக் கொள்முதல் செய்வதை அப்போது காணமுடிகின்றது.

இதேவேளை, முட்டை விலையும் குறைந்துள்ளதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, மீண்டும் இம் மாலை நேர மீன் சந்தை நடத்துவதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ளுவார்களா? என பொதுமக்கள் கேட்கின்றனர்.

**மாதாந்தம் தீபம் ஏற்றுவதன் புகழ்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தை | – | வாழ்வில் வெற்றி |
| 2. | மாசி | – | பாவங்கள் விலகும் |
| 3. | பங்குனி | – | தர்ம சிந்தனை |
| 4. | சித்திரை | – | தானிய விருத்தி |
| 5. | வைகாசி | – | செல்வம் திகழும் |
| 6. | ஆனி | – | கன்னிகாதானம் |
| 7. | ஆடி | – | ஆயுள் விருத்தி |
| 8. | ஆவணி | – | சந்தான விருத்தி |
| 9. | புரட்டாதி | – | மகாலஷ்மி அருள் |
| 10. | ஐப்பசி | – | சௌபாக்கிய மருள் |
| 11. | கார்த்திகை | – | மோஷம் சாந்தி |
| 12. | மார்கழி | – | நோய் பிணி தீரும் |

# மீண்டும் பொலிவு பெறுவதற்காக காத்திருக்கும் அல்லைப்பிட்டிக் கிராமம்.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டிக் கிராமம் யாழ். ஊர்காவற்றுறை பிரதான வீதியில் சுமார் ஆறு மைல் தூரத்தில் உள்ளது. தீவுப் பகுதிகளில் பின்தங்கிய கிராமங்களில் இதுவும் ஒன்றாகும்.

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்பு 500 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வந்தனர். இவர்களில் விவசாயிகளும் மீனவக் குடும்பங்களும் நிரந்தரமாகவே வாழ்ந்து வந்தனர். இவர்கள் பிட்டும் தேங்காயும் போல் ஒற்றுமையாகவும் செல்வச் செழிப்புடனும் வாழ்ந்து வந்தனர்.

இப்பகுதியிலுள்ள மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு செல்வந்தர்களாக வாழ்ந்து வந்தனர். இதனைப் போலவே விவசாயிகளும் தங்கள் விவசாய நிலங்களில் புகையிலை, வெங்காயம், மிளகாய் மற்றும் சிறு தானியப் பயிர்களும் பயிரிட்டு வாழ்ந்தார்கள். அல்லைப்பிட்டிப் பகுதி வயல் நிலக் காணி 188 ஏக்கரும் மேட்டு நிலக்காணி 178 ஏக்கரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அல்லைப்பிட்டி 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இப்போதும் பெரிதும் பாதிப்பு அடைந்து காணப் படுகின்றது. இப் பகுதியில் வாழ்ந்த மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கி வந்த இரு பாடசாலைகளும் அழிவடைந்து காணப்படுகின்றன.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயமும் முற்றாக இடிந்து தரைமட்டமாக்கப்பட்டது. அல்லைப்பிட்டி றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மிச்சமில்லை. அதன் கட்டிடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

பராசக்தி வித்தியாலயம் தற்போது வெளிநாட்டு நிறுவனத்தின் உதவியோடு மீண்டும் புதிதாக மேல் மாடி கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. தற்போது 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி வித்தியாலயத்தில் நீண்ட காலம் கல்வி கற்பித்து ஓய்வு பெற்றுள்ள ஆசிரியை திருமதி புவனேஸ்வரியம்மா சோமசுந்தரனின் 80 ஆவது அகவையையொட்டிய அமுதவிழாவில் கடந்த சனிக்கிழமை காலை 09.00 மணிக்கு பெரும் திரளான மாணவர்கள், பெற்றோர்கள், புத்திஜீவிகள் மத்தியில் பங்குபற்றியிருந்தனர். இந்த மாபெரும் விழாவை ஆசிரியையிடம் கல்வி கற்ற மாணவர்களும், பெற்றோரும், ஊர் மக்களும் சிறப்பாக நடத்தியுள்ளனர்.

ஆசிரியையிடம் கல்வி கற்று தற்போது ஆசிரிய கலாசாலை தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள கலாநிதி செ. திருநாவுக்கரசும் குறிப்பிடத்தக்கவர். மேற்படி ஆசிரியையின் படத்துடன் அமுதமலர் வெளியிடப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் வாழ்ந்து சேவைசெய்த பெரியார்களின் படங்களுடன் அல்லைப்பிட்டி கிராமத்தின் சிறப்புக்களைத் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது. குறிப்பாக இங்குள்ள 6 இந்த ஆலயங்கள், 6 கிறிஸ்தவ தேவாலயங்கள், இப்பகுதியிலுள்ள பொது நிறுவனங்கள், அல்லைப்பிட்டியிலுள்ள 4 பாடசாலைகள், உள்ளூராட்சி சபை உப அலுவலகம் என்பவற்றின் வரலாறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

விழா நாயகி அல்லைப்பிட்டி இனிச்ச புளியடி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாட்டைத் தொடர்ந்து விழா மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார். வரும் பாதையில் பொதுமக்கள் பலர் மங்கல கும்பங்கள் வைத்து மலர் மாலை அணிவித்து கௌரவித்தமையானது கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்பட்டது.

விழா அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலய மண்டபத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. தீவக கல்வி வலய அழகிய உதவிக்

கல்விப்பணிப்பாளர் (ஓய்வுபெற்றவர்) ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரா வாழ்த்து மடல் வாசித்து வழங்கினார். பிரதம விருந்தினர், ஓய்வுபெற்ற நீதிபதி சரோஜினிதேவி இளங்கோவன் உட்பட பல விருந்தினர்கள் கலந்துகொண்டு பேசினார்கள். விழாவை முன்னிட்டு அமுத விழா மலர் வெளியிடப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**திருக்கோயிலில் செய்யத் தகாதவை**

1) வஸ்திரத்தால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல் இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும் பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என சாஸ்திரங்கள் கூறுகின்றன.

2) ஆசாரமில்லாது நடமாடுதல்

3) ஒரேமுறை பிரகாரத்தில் வலம் வருதல்

4) எச்சில் உமிழ்தல் மலசலம் கழித்தல்

5) நித்திரை செய்தல் கால்களை நீட்டிக்கொண்டு இருத்தல்

6) மயிர் கோதி முடிதல் சூதாடுதல்

7) பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்

8) வீண் வார்த்தை பேசுதல், பொய் பேசுதல், இரைந்து சிரித்தல்

9) பிறரைத் துன்புறுத்தல்

10) சுவாமிக்கும் பலிப்பீடத்துக்கும் இடையில் வணங்குதல்

11) அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல் வலம் வருதல்

12) திருவிளக்கு அணையக்கண்டு தூண்டாதிருத்தல்

13) காம இச்சை கொள்ளுதல்

# மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயம் எப்போது மீண்டும் ஆரம்பமாகும்?

யுத்த அனர்த்தங்களால் முற்றாகப் பாதிக்கப்பட்டு நீண்ட காலமாக செயலிழந்து காணப்படும் மண்டைதீவு கார்த்திகேசு வித்தியாலயத்தைப் புனரமைத்து மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து தீவகக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

விதானையார் பரம்பரையில் வந்த கார்த்திகேசு விதானையார், அம்பலவாணர் விதானையார் ஆகிய இரு சைவப் பெரியார்களும் மேற்படி கிராம அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வந்தவர்கள் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி ஏழை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மண்டைதீவு கிழக்கில், பாடசாலை ஒன்றை நிறுவி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தவகள். இதனால் இவ்வூர் மக்கள் அவ்வித்தியாலயத்தை கார்த்திகேசு வித்தியாலயம் என பெயர் சூட்டி அழைத்து வருகின்றனர்.

இப் பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உயர்ந்த பதிவுகளை வகித்து வருகின்றனர். தீவகக் கல்வித் திணைக்களம் மேற்படி கல்லூரி புனரமைப்புப் பணியில் ஈடுபட்டால் அவர்கள் தங்களால் இயன்ற நிதியுதவிகளை வழங்க காத்திருக் கின்றார்கள்.

மேற்படி பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய (1990) வேலணையைச் சேர்ந்த அமரர் சண்முகரத்தினம் இந்த பாடசாலை வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்தவர். தனது சொந்தப் பணத்தில் பாடசாலையைச் சுற்றி வேலி அமைத்துக் கொடுத்தவர்.

மண்டைதீவிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவிலும் மற்றும் நலன்புரி நிலையங்களிலும் தங்கியிருந்த மண்டைதீவு மக்கள் தற்போது ஏற்பட்ட அமைதியான சூழலைத் தொடர்ந்து தங்கள் சொந்த இடங் களுக்குத் திரும்பிய வண்ணம் உள்ளனர். இதனால், இங்கு மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ள போதும் மக்களின்அடிப்படைப் பிரச்சினை கள் தீராத நிலை உள்ளதாக பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கூடிய பணம் ஒதுக்கி மேற்படி கல்லூரி புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு உதவ வேண்டும் என பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இதேவேளை, மண்டைதீவு முன்னாள் கிராமத் தலைவர் அம்பலவாணர் விதானையார் மேற்கொண்ட சேவைகள் இப்பகுதி மக்கள் இன்றும் கூறிப் பெருமைப் படுகின்றார்கள்.

அமரர் அம்பலவாணர் விதானையார் இப்பகுதி மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக தனது சொந்தப்பணத் தில் ஆட்களை நியமித்து மண்டைதீவுச் சந்தியில் நீண்டகாலமாக குடிநீர் நிலையம் ஒன்று நிறுவி மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை நீக்கியவர்.

மண்டைதீவுப் பகுதியில் சைவத்தையும் தமிழையும் வளர்க்க இவர் உழைத்தவர். இதனால் அருள்மிகு சிறுப்புலம் கந்தசுவாமி கோவிலை நிறுவி இப்பகுதி மக்களுக்கு இறைபணியை உணர்த்தியவர். இவர் ஆற்றிய ஆன்மீகத் தொண்டுகளை மக்கள் இன்றும் நினைவுகூருவர்.

அத்தோடு இப்பகுதி ஏழை எளிய மக்களின் வயிற்றுப் பசியைத் தீர்க்க பல அன்னதானப் பணிகளை தனது சொந்தப் பணத்தில் செய்து வந்தவர். அவர் மறைந்து போனாலும் இப் பகுதி மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடமாக என்றும் இருப்பார்.

# கட்டப்பிராய் கிராமத்தின் குறைபாடுகள் நீங்குவது எப்போது?

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கட்டப்பிராய்க் கிராமத் தில் உப அஞ்சல் நிலையம் இல்லாமையால் பிரதேச மக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்ற சுமார் 2 1/2 மைலுக்கு மேல் நடந்து கல்வியங்காடு சந்திக்குச் செல்லவேண்டியுள்ளதென தெரிவிக்கப்படுகின் றது.

இதனால் முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றார்கள். ஓய்வூதியம் பெறும் முதியவர்களும் பெரும் சிரமப்படுகின்றார்கள்.

இதேவேளை கொட்டும் பருவமழைக்கு மத்தியில் பருத்தித்துறை பிரதான வீதியில் பாலத்தின் திருத்த வேலைகள் நத்தை வேகத்தில் நடைபெறுவதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர். வீதியின் ஒரு பகுதியை மறித்து வாகனங்கள் சென்றுவரக்கூடியதாக அமைத்து வேலைகள் நடைபெறுகின்றன.

மேற்படி பாலம் திருத்தும் வேலைகள் கோடை காலத்தில் செய்வதை விடுத்து ஏன் மாரி காலத்தில் கொட்டும் மழைக்கு மத்தியில் செய்யவேண்டுமென பாதசாரி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது இவ்வாறிருக்க கட்டப்பிராய் கலைமணி வீதியின் தொடக் கத்தில் மின் விளக்கு அமைத்துத் தருமாறு மக்கள் கோரி வந்தபோதும் கோப்பாய் பிரதேசசபை அதைக் கவனத்தில் எடுக்காது இருந்து

வருகின்றது என பிரதேச வாசி ஒருவர் தெரிவித்தார்.

சிறிது காலத்துக்கு முன்பு தனது தேநீர்க்கடையைப் பூட்டி விட்டு இரவு நேரம் வீடு திரும்பிய ஒருவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்குண்டு அந்த இடத்தில் இறந்த சம்பவமும் நடைபெற்றதாகக் கூறப் படுகின்றது.

ஆகவே இனிமேலாவது குறிப்பிட்ட இடத்தில் மின்சார விளக்கு ஒன்றை அமைத்து வீதி விபத்துக்கள் நடைபெறாது இருக்க சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜீ.பி.எஸ் வீதிக்கும் பருத்தித்துறை வீதிக்கும் குறுக்காகச் செல்லும் வீதியை கோப்பாய் பிரதேசசபை சுகாதார சபை ஊழியர்கள் துப்பரவு செய்து வருகின்றனர்.

நீண்ட காலமாக மேற்குறிப்பிட்ட வீதியில் அப்பகுதி மக்களில் சிலர் தங்கள் வீட்டுக் கழிவுப் பொருட்களை உரைப்பைக்குள் கட்டி வீதிகளில் வீசி வருகின்றார்கள்.

இதனால் இப்பகுதியில் நுளம்புத் தொல்லைகள் தாங்க முடிவதில்லை. அத்தோடு தற்போது பெய்துவரும் பெருமழையால் மழை வெள்ளம் வீதியில் உள்ள குன்று குழிகளுக்குள் நிறைந்து சிறு சிறு குளங்கள் போல் காணப்படுகின்றது. இதனால் நுளம்பு பல மடங்காகப் பெருகி மக்கள் இரவில் நித்திரை செய்ய முடியாது திண்டாடுகின்றார்கள். இதனால் டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு வருகின்றது.

மலேரியா நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றார்கள். இதைவிட வயிற்றோட்டம், வாந்தி பேதி போன்ற நோய்களும் பரவலாம் என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின் றது.

தொடர்ந்து பெய்துவரும் மாரி மழையால் இப்பகுதியிலுள்ள சிறு குளங்கள், குட்டைகள், கிணறுகள் நீர் நிறைந்து காணப்படுகின்றன.

விவசாயிகள் தங்கள் தோட்ட நிலங்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் தங்கள் பயிர்கள் அழிந்து நஷ்டம் ஏற்படுமே என்று அச்சம் தெரிவிக்கின்றனர். இது இவ்வாறிருக்க நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின்

கட்டப்பிராய் கிளைக்கு அருகிலுள்ள மலசலகூடம் நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் அசுத்தமடைந்து சுகாதார கேடுகளை ஏற்படுத்துகின் றது. இதுபற்றி எவரும் அக்கறை கொள்ளாது இருக்கின்றனர். ஆகவே மேற்படி சங்கத்தினர் இந்த மலசல கூடத்தைத் திருத்தி மக்கள் பாவனைக்கு விடுமாறு கோரி வருகின்றனர்.

இப்பகுதியில் பொது நூல் நிலையம் ஒன்று இருந்தும் இல்லாதது போல் இருப்பதாக ஊர்வாசி ஒருவர் தெரிவிக்கின்றார். இப்பகுதி மாணவர்கள் வாசகர்கள் நலன் கருதி இந் நூல் நிலையத்தை மீள ஆரம்பிக்க முன்வர வேண்டும். அதில் மக்களுக்குப் பயனுள்ள அறிவு நூல்கள் இருக்க வேண்டும். தினசரி சகல பத்திரிகைகளும் வாசகர்களுக்குக் கிடைக்கத்தக்க முறையில் ஒழுங்கு செய்யவேண்டும்.

கட்டப்பிராய் பகுதியில் அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப் படுகின்றது சில நாட்களில் பகல் உட்பட முழு நாளும் மின்சாரம் துண்டிக் கப்படுகின்றது. இதனால் திருடர்கள் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வீடுகளுக்குள் புகுந்து அகப்பட்டதைத் திருடிச் செல்கின்றனர்.

அதேவேளை மாணவர்கள் இரவு வேளைகளில் கல்வி கற்க முடியாத கஷ்டப்படுகின்றார்கள்.

மின்சாரம் துண்டிக்கப்படும் இரவு நேரங்களில் மாணவர்கள் குப்பி விளக்குகளில் கல்வி கற்று வருகின்றார்கள். அதோடு கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக க. பொ.த. சாதாரண வகுப்புக்கள் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்கள் பெரிதும் கஷ்ரப்படுகின்றனர்.

மாணவர்களில் அக்கறை காட்டி இரவு வேளைகளில் மின்சாரம் துண்டிக்காது இருக்கவேண்டும் எனவும், இப் பிரதேச மக்கள் தபால்களை அனுப்புவதற்கு வசதியாக தபால் பெட்டி ஒன்றை இப்பகுதியில் வைத்து உதவுமாறும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரி வருகின்றனர்.

# தேடிவரும் பக்த கோடிகளின் குறைதீர்க்கும் நயினை அம்பாள்

வருடந்தோறும் ஆடி மாதம் நயினை அருள் மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் 19 ஆம் திகதி காலை 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் ஜூலை 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 04 ஆம் திகதி புதன்கிழமை பூங்காவனமும் சிறப்பு உற்சவங்களும் வழமை போல் இம்முறையும் விமர்சையாக நடை பெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

மேற்படி ஆலய உற்சவத்தை முன்னிட்டு புலம்பெயர்ந்து வாழும் நயினாதீவு மக்கள் உற்சவ தினங்களில் பங்குபற்றி அம்பாளின் அருளைப் பெறுவதற்கு தங்கள் குடும்பத்துடன் வருகை தந்தவண்ணம் உள்ளனர்.

மேற்படி ஆலய உற்சவ தினங்களில் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் தினமும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஆலயத்துக்கு வந்து அம்பாளைத் தரிசித்து தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்.

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும் காவடி, தூக்குக்காவடி எடுத்தும் பெண்கள் கற்பூரச் சட்டி ஏந்தியும் அடி அடித்தும் தங்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றார்கள்.

உற்சவ தினங்களில் கலந்து கொள்ளும் அடியார்கள் அனைவருக்கும் வழமைபோல தினசரி மதியம், இரவு இரு வேளைகளில் நயினாதீவு அமுதசுரபி அன்னதான மண்டபத்தில் அன்னதானம் வழங்கவுள்ளார்கள். நூற்றுக்கணக்கான தொண்டர்கள் மேற்படி அன்னதான நிகழ்வுக்கு நிதி உதவியோ, பொருள் உதவியோ வழங்க விரும்பும் அடியார்கள் அமுதசுரபி அன்னதான சபையிடம் கொடுத்து உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆலய உற்சவத்தை முன்னிட்டு வேலணை பிரதேச சபையின் உப அலுவலகம் ஆலய வீதியிலமைய உள்ளது. அடியார்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். ஆலய உற்சவ தினங்களில் கலந்து கொள்ளும் பெண்கள் தங்க நகைகளை அணிந்து வரவேண்டாம். அத்தோடு தமிழ்க் கலாசாரத்தைப் பேணும் வகையில் ஆடைகள் சேலைகள் அணிந்து பக்திபூர்வமாகக் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

உற்சவ தினங்களில் யாழ். மத்திய பஸ்நிலையத்திலிருந்து தினசரி 10 இற்கும் மேற்பட்ட இ. போ. ச. பஸ் வண்டிகள் குறிகட்டுவான் வரை பிரயாண சேவையில் ஈடுபட்டுள்ளன. தேர், தீர்த்த உற்சவங்களில் பத்துக்கு மேற்பட்ட பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டுள்ளது என யாழ். மத்திய பஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதை விட 25 இற்கும் மேற்பட்ட தனியார் துறை மினி பஸ் சேவையும் நடைபெறவுள்ளது. அடியார்கள் தங்கள் உடமைகளை திருடர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும். குழந்தைகளுக்கு தங்க நகைகள் அணிந்து வருவதைப் பெற்றோர்கள் கட்டாயம் தவிர்த்துக் கொள்ளவேண்டும். உற்சவ தினங்களில் பணியாற்றத் தொண்டர்கள், உறுப்பினர்கள், கிராம அலுவலகர்கள், பாடசாலை சாரணர்கள் உட்பட பல சமூக அமைப்புக்கள் அடியார்களுக்கு வேண்டிய உதவிகள் பாதுகாப்புக்கள் வழங்கவும் முன்வந்துள்ளனர்.

இதைவிட உற்சவ தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று ஆலடி வீதியில் இயங்கவுள்ளது. இதில் தினசரி 25க்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை உற்சவத்தை முன்னிட்டு தினசரி 25 இற்கும் மேற்பட்ட படகுகள் குறிகாட்டுவான் இறங்குதுறைக்கும் நயினாதீவு

இறங்குதுறைக்குமிடையிலான படகு சேவையில் மட்டுப்படுத்தப்பட்டே இயங்குமாறு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேர், தீர்த்தம் ஆகிய தினங்களில் மேற்பட்ட படகுகள் சேவைக்கு அமர்த்தப்படுமென படகு உரிமையாளர்கள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. படகில் பிரயாணம் செய்யும் அடியார்கள் அனைவரும் சிறுவர் உட்பட பாதுகாப்பு அங்கிகள் அணிய வேண்டும் எனவும் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்திருக்கின்றது.

ஆலய மஹோற்சவ வேலைகள் தற்போது துரித கதியில் ஆலய பரிபாலன சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உற்சவத்தை முன்னிட்டு தண்ணீர்ப் பந்தல்கள் தாக சாந்தி நிலையங்களும் தீவுப்பகுதி களில் ஆங்காங்கே அமைக்கப்பட்டு, அடியார்களுக்கு சக்கரைத் தண்ணீர் மற்றும் குளிர்பானங்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

உற்சவ தினங்களில் நூற்றுக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. வர்த்தகர்கள் சிலர் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆலய சுற்றாடல் மின்சார தீபங்க ளால் அலங்கரிக்கப்பட்டு பக்தர்களைக் கவரும் வண்ணம் காட்சியளிக் கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

வருடம்தோறும் பல்லாயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள், தென்னி லங்கை உட்பட நாட்டின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் வருகைதந்த வண்ணம் உள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதியாக காலச் சூழலும் நிறைவான போக்குவரத்து வசதிகளுமே பக்தர்களின் அதிக வருகைக்கு காரணமாகும் என தெரிவிக்கப்படுகின்றது. உற்சவ தினங்களில் விசேட மேளக் கச்சேரிகளும் விசேட சொற்பொழிவுகளும் கதாப் பிரசங்கங்களும் ஆலய வெளி வீதியில் இடம்பெற்று வருகின்றன.

# மண்டைதீவில் விவசாயச் செய்கை செழிப்படையுமா?

கடந்த 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மண்டைதீவு விவசாயிகள் இவ்வருடம் பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். மண்டைதீவு விவசாயிகள் சம்மேளனத்தின் முயற்சியால் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம், விதை நெல், முட்கம்பி, விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டு தற்போது விவசாயிகள் நெய் செய்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்களுக்கு வேண்டிய தேவைகளை வேலணை கமநல சேவை நிலைய மண்டைதீவு விவசாயிகள் சம்மேளனம் ஊடாக வழங்கி வருவதாக மண்டைதீவு விவசாயிகள் சம்மேளன செயலாளர் மாணிகராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்கு மாகாண சபையின் செயலாளரான திருமதி விஜயலட்சுமி ரமேஷ் , யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமாரன் மற்றும் அரச உயரதிகாரிகள் , கமநல சேவை உத்தியோகத்தர்கள் மண்டைதீவுக்கு நேரடியாக விஜயம் செய்து அவர்கள் குறைகளை கேட்டறிந்ததுடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொடுக்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

150 இற்கு மேற்பட்ட விவசாயிகள் வேலணை கமநல சேவை நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்குரிய விதை நெல்லை வேலணை கமநல சேவை அதிகாரிகள் நேரில் வந்து விவசாயிகளுக்கு வழங்கினர். இந்த நிகழ்வு மண்டைதீவு தெற்கு சர்வோதைய மண்டபத்தில் இடம்பெற்றது.

நீண்ட காலம் பெரும்போக நெற்செய்கை இன்றி காணப்பட்ட விவசாய நிலங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இம்முறை அதிக விளைச்சலைத் தராது எனவும் விவசாயி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மண்டைதீவு விவசாயிகள் இம்முறை புகையிலைச் செய்கையில் நாட்டம் செலுத்தாது வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட வருகின்றனர். தென்னிலங்கை வர்த்தகர்கள் யாழ். புகையிலையில் அதிக நாட்டம் கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

குறுகிய காலப் பயிரான யாழ். வெங்காயத்துக்குத் தென்னிலங் கையில் அதிக கிராக்கி ஏற்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுலா வரும் தென்னிலங்கை வாசிகள் பெருந்தொகையான வெங்காயங்களை (ஒரு கிலோவுக்கு மேல்) கொள்வனவு செய்கின்றார்கள். பம்பாய் வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாவரை சந்தைகளில் விற்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாழ். விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விலைகள் நிர்ணயம் செய்து மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும்.

இது இவ்வாறிருக்க மண்டைதீவில் உற்பத்தி செய்யப்படும் நாற்றுக் கன்றுகளுக்கும் யாழ். குடாநாட்டில் பெரும் கிராக்கி இருந்து வருகின்றது. காரணம் இங்கு உற்பத்தி செய்யப்படும் நாற்றுக் கன்றுகள் எந்தத் தரத்திலான தரையிலும் செழித்து வரும் தன்மையுடையது. இதகஷனால் பெருந்தொகையான விவசாயிகள் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் புகையிலை, மிளகாய் நாற்றுக்கன்றுகள் கொள்முதல் செய்ய மண்டைதீவுக்கு வந்து செல்கின்றனர். இதனால் மண்டைதீவில் ஜனநடமாடடடம் பல மடங்காக அதிகரித்துள்ளது போக்குவரத்துச் செய்வதில் அதிக பிரயாணிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறு தானியங்களைப் பயிரிடுவதில் யாழ். மாவட்ட விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் உள்ளூர் உற்பத்திகளுக்கு சந்தையில் நல்ல கிராக்கி ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

# நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் இருக்கும் மண்டைதீவு கடற்கரை வீதி

மண்டைதீவு கிராமத்தை இணைக்கும் பிரதான வீதியான கடற்கரை வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் உள்ளதால் மேற்படி வீதியால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்யமுடியாத கஷ்ட நிலைக்குள்ளாகி வருகின்றது.

மேற்படி வீதியைப் புனரமைத்து இவ் வீதியால் இ.போ.ச. பஸ்களில் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். இந்த பஸ் சேவையானது யாழ். நகரில் இருந்து ஆரம்பித்து மண்டைதீவு ஊடாக ஊர்காவற்றுறை வரை சென்று திரும்ப வேண்டும் என மறைந்த காவலூர் இரத்தினம் எண்ணத்தில் இருந்து வந்தது. என்னுடன் அடிக்கடி இது பற்றி ஊரையாடுவார்.

அவரது மறைவுக்குப் பின்பு யார் யாரோ அவரது இடத்துக்கு வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். மக்களின் போக்குவரத்தில் அக்கறையும் ஆர்வமும் உள்ளவர்கள் அவரது கனவை நினைவாக்க முன்வர வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து இப்பகுதி மக்கள் நலன்புரி நிலையங்களில் இருந்தும் வெளியிடங்களிலிருந்தும் தங்கள் சொந்த இடமான மண் டைதீவுக்குப் படிப்படியாக திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள். வீடமைப் புத்திட்டங்கள் மூலம் குடியிருப்புக்கள் அமைத்து வழங்கப்பட்டு வருகின் றன.

இதனால் தற்போது மக்கள் தங்கள் சொந்த இடத்துக்குத் திரும்பியுள்ளார்கள். மக்கள் மீளக் குடியிருக்கத் திரும்பிய போதும் சில அடிப்படைத் தேவைகள் முழுமையாக இன்னும் நிறைவேற்றிக் கொடுக் கப்படவில்லை. என அப்பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவர் கவலையு டன் தெரிவித்தார்.

இப்பகுதியில் நீண்ட காலமாக நிலவிவந்த குடிநீர் பிரச்சினை அண்மையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இருந்த போக்குவரத்து கஷ்டம் தற்போது நீக்கியுள் ளது. இதனால் மக்கள் தங்கள் தேவைக்குக்கூட பஸ்களில் சென்று திரும்புகின்றனர். தினசரி நான்கு, ஐந்து தடவை இ.போ.ச. பஸ் சேவை நடைபெறுகின்றது. இதைவிட தனியார் மினிபஸ் சேவை ஒன்றும் நடை பெறுகின்றது. இங்கு மண்டைதீவு பாடசாலைகளில் படித்த மாணவர்கள் பலர் யாழ். நகர் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள். பிரதேச வாசி ஒருவர் தெரிவிக்கையில் மண்டைதீவுப் பாடசாலைகளில் மாணவர் வரவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். மண்டைதீவு மாணவர்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டிருந்தும் மின்சார வசதியின்மையால் மாணவர்கள் அதனைப் பாவிக்கமுடியாதுள்ளது.

ஆகவே யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து மண்டைதீவு ஊடாக வேலணை ஊர்காவற்றுறை வரை மக்கள் சென்று வரக்கூடிய வாறு பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும். இதேவேளை மண்டைதீவு வைத்தியசாலையில் தங்கியுள்ள கடற்படையினரை வேறு இடத்துக்கு மாற்றி வைத்தியசா லையைப் புனரமைக்கும் பணிகளை தாமதியாது ஆரம்பிக்க வேண்டும். இப்பகுதி மக்கள் வைத்திய தேவைக்கு யாழ். போதனா வைத்தியசா லைக்குச் சென்று வரவேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக் கின்றனர்.



## நூலாசிரியர் பற்றி ...

யாழ். கட்டப்பிராய் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான நாகராஜா இராமச்சந்திரா ஜே.பி. தனது இரண்டாவது நூலாக யாழ் ஓசை கட்டுரைகள் என்னும் நூலை வெளியிடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

இவர் ஆரம்பத்தில் ஈழநாடு பத்திரிகையில் பிராந்திய நிருபர்களில் ஒருவராக சிறப்பாக பணியாற்றி வந்தவர். தற்பொழுது வீரகேசரி பத்திரிகையின் வேலணை நிருபராக கடந்த 35 வருடங்களுக்கு மேலாக சிறப்பாக பணியாற்றி வருகின்றார்.

இவர் பத்திரிகைத் துறையோடு நில்லாது ஆக்க இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டு வருவது பாராட்டத்தக்கது. அதோடு சஞ்சிகைகளும் வெளியிட்டவர்.

பிரபல தொழிற்சங்கவாதியான இவர் இன்னும் பல நூல்களை அச்சிட்டு வெளியிடவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். வாழ்க வளர்க இவரது பணி.